
அகநானூறு
களிற்றியானை
நிரை

கையெழுத்துப்பிரதி எண்: 7



உ


கடவுள் துணை.

எட்டுத்தொகையுள் ஒன்ருகிய

அகநானூறு.

முதலாவது

களிற்றியானை நிரை.



இது

பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து

பின்னத்தூர்,

அ-நாராயணசாமிஐயர்

எழுதியபுஸ்தகம்.

சோபகிருது-ஸ்ரீ

உ

கடவுள் துணை.

அகநானூறு

மூலபாடம்

காப்பு

கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பி னஃதே மையி னுண்ஞாண்
நுதல திமையா நாட்ட மிகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலு முண்டத் தோலா தோற்கே
ஊர்ந்த தேறே சேர்ந்தோ ளுமையே
செவ்வா னன்ன மேனி யவ்வான்
றிலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்
றெரியகைந் தன்ன வவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா வமரரு முனிவரும் பிறரும்
யாவரு மறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமா னுரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாணிழல் தவிர்ந்தன் றாலுலகே.

என்பது, கடவுள் வாழ்த்து.

பாரதம் பாடிய பெருந்தேவனார்.

அகநானூறு.

புன்காண்முடு வளமுள கழியவர் மலர

நூல்

வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ
உருவக் குதிரை மழவ ரோட்டிய
முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட் டியானைப் பொதினி ய
இழைகெழு ரோடன் பயிலெடு சொர்ந்திய
நுண்பூண் பிரியல மென்மை சொற்கு
அருஞ்சுரம் கொல்லோ தோழி சிலந்த
செம்மல் பலேந்தோ ணொசிந்த் சேய்நாட்டு
பொலங்கல வெருக்கை தமிழார் நிலம்பக
கழல்போல் வெங்கதிர் பைதகத் தெ
அழிசேய்ந் துலந்த மாத்த வரைகோ
பருதிப் பைஞ்சுனை யாமகப் புலர்தலி
இருகோட்டு பொறியும் வெம்மைய யா
பந்திர நின்மையன் வெளவுநர் மடியச்
சுரம்புல் லென்ற வாத்த வலங்கு சினை
மரமுள் முத்தை நவிரல் வான்பூச்
சுரலங் கலெவரி யெருப்ப வாடுக்
காடிறைப் பதிர் வழு பொங்கிமுன்
கடல்போந் தென்கல காடுகக் கோ
ஏது பிரிவை அக்குளாய
தொழிக்குச் சொல்லியது.
மாறுலன்.

க.— களிற்றியானைநிரை.

நூல்

வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ
லுருவக் குதிரை மழவ ரோட்டிய
முருக னற்போர் நெடுவே ளாவி
யறுகோட் டியானைப் பொதினி யாங்கட்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியல மென்ற சொற்றாம்
மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக
வழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலி
னிழறேய்ந் துலறிய மரத்த வறைகாய்
பறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலி
னுகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குந ரின்மையின் வௌவுநர் மடியச்
சுரம்புல் லென்ற வாற்ற வலங்குசினை
நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடுவளி யெடுப்ப வாருற்
றுடைதிரைப் பிதிர்வற் பொங்கிமுன்
கடல்போற் றோன்றல காடிறந் தோரே.

என்பது பிரிவிடை யாற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

மாமூலன்.

க.— களிற்றியானை நிரை.

உ கோழிலை வாழைக் கோண்முதிர் பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேற
லறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங்
குறியா வின்ப மெளிதி னின்மலைப்
பல்வேறு விலங்கு மெய்து நாட
குறித்த வின்ப நினக்கெவ னரிய
வெறுத்த வேஎர் வேய்புரை பணைத்தோ
ணிறுப்ப வில்லா நெஞ்சமொடு நின்மாட்
டவளு மினைய ளாயிற் றந்தை
யருங்கடிக் காவலர் சோர்பத னொற்றிக்
கங்குல் வருதலு முரியை பைம்புதல்
வேங்கையு மொள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே. (உ)

எ-து, பகற்குறிக்கட் செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது.

கபிலர்.

க.— களிற்றியானைநிரை.

௩ இருங்கழி முதலை மேஎந்தோ லன்ன
கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை யீன்றிளைப் பட்ட
கொடுவாய்ப் பேடைக் கல்கிரை தரீஇய
மான்றுவேட் டெழுந்த செஞ்செவி யெருவை
வான்றோய் சிமைய விறன்மலைக் கவாஅற்
றுளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி
யொண்செங் குருதி யுவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடிமுடைக்
கொள்ளை மாந்தரி னானாது கவரும்
புல்லிலை மராஅத்த வகன்சே ணத்தங்
கலங்க வுள்ளமொடு கழியக் காட்டிப்
பின்னின்று துரக்கு நெஞ்ச நின்வாய்
வாய்போல் பொய்ம்மொழி யெவ்வங் களையா
கவிரித ழன்ன காண்பின் செவ்வா
யந்தீங் கிளவி யாயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்த்த நோக்க
நெடுஞ்சே ணாரிடை விலங்கு ஞான்றே.

எ-து, முன்னொரு காலத்துப் பொருள்வலிக்கப் பட்டுப் பிரிந்தான் தலைமகன் பிரிந்து இடைச்சுரத்தில் நின்று அவள்நலம்நயந்து மீளலுற்ற நெஞ்சினைக் கழறிப்போய் வினைமுடித்துவந்த தலைமகன் பின்னும் பொருள்வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது. எயினந்தை (௩).
மகன் இளங்கீரனார்.

க.— களிற்றியானை நிரை.

முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பின்
பரலவ லடைய விரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறங் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி ழலரி னாறும்
ஆய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே.

எ—து, தோழி தலைமகளைப் பருவங் காட்டி வற்புறுத் தியது.

குறுங்குடி மருதனார்.

க.— களிற்றியானைநிரை.

299-பாடல் [illegible]

அளிநிலை பெருஅ தமரிய முகத்தள்
பொறா
விளிநிலை கொளாஅ டமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா வளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த வோமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப
வுதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கு நிரைநிலை யதர
பரன்முரம் பாகிய பயமில் கான
மிறப்ப வெண்ணுதி ராயி னறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
யன்ன வாக வென்னுநள் போல
முன்னங் காட்டி முகத்தி னுரையா
வோவச் செய்தியி னொன்றுநினைந் தொற்றிப்

பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயின ளுயிர்த்த காலை மாமலர்
மணியுரு விழந்த வணியிழை தோற்றங்
கண்டே கடிந்தனஞ் செலவே யொண்டொடி
யுழைய மாகவு மினைவோள்
பிழையல ளாதோ பிரிதுநா மெனினே.

எ-து, பொருள்வயிற் பிரியக்கருதிய தலைமகன் றன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ. ௫

௧.—களிற்றியானை நிரை.

அரிபெய் சிலம்பி னாம்பலந் தொடலை
யரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை
யிழையணி பணைத்தோ ளையை தந்தை
மழைவளந் தரூஉ மாவண் டித்தன்
பிண்ட நெல்லி னுறந்தை யாங்கட்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே யினியவ்
தாக வணமுலை யரும்பிய சுணங்கின்
மாசில் கற்பிற் புதல்வன் றாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃ தமைகுவந் திசில
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தாம் புவள்ளை யாய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
பல்வேன் மத்தி கழாஅ ரன்னவெம்
மிளமைசென் றுதவத் தொல்லஃதே
யினியவன் செய்வது பொய்ம்மொழி யெமக்கே.

எ-து, பரத்தையிற் பிரிந்துவந்த கிழவற்குக் கிழத்தி சொல்லியது.

பரணர் (௬)

க.— களிற்றியானைநிரை.

முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
யலமர லாயமோ டியாங்கணும் படாஅன்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்புடை வியனகர்க் கடையும் போகல்
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
வெண்சுடர் நல்லி லருங்கடி நீவித்
தன்சிதை வறித லஞ்சி யின்சிலை
யேறுடை யினத்த நாறுயிர் நவ்வி!
வலைகாண் பிணையிற் போகி யீங்கோர்
தொலைவில் வெள்வேல் விடலையொ டென்மக
ளிச்சுரம் படர்தந் தோளே யாயிடை
யத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்த்தலைப் படுதல் செல்லேன் இத்தலை
நின்னொடு வினவல் கேளாய் பொன்னொடு
புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்
ஆய்சுளைப் பலவின் மேய்கலை யுதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.

எ-து, மகட்போக்கிய செவிலி நவ்விப் பிணை கண்டு சொல்லியது.

கயமனார். எ.

க.— களிற்றியானை நிரை.

அ எயற் புறத் தீர்ம்புறத் திவத்த

குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
கதுவப்
தூங்குதோற் றுதிய வள்ளுகிர்க் காலிற்
பாம்புமத னழியும் பானாட் கங்குலு
னிகுளை
மரிய வல்லம ணிகுழை பெரிய
கேழ லட்ட பேழ்வா யேற்றைப்
புலாஅ
பலாவம லடுக்கம் ~~புலாவ~~ வீர்க்குங்
கழைநரல் சிலம்பி ஞெங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப்
பிடியடி முருக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பு மவர்நாட்
டெண்ணரும் பிறங்கன் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கியநீ யிரிச்சுர
மறிதலு மறிதிரோ வென்னுநர்ப் பெறினே.

எ-து, தலைமகன் இறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

பெருங்குன்றூர் கிழார். (அ)

க.— களிற்றியானை நிரை.

௯ கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் பெஃகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
வப்புநுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்படர் அன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன தீம்புழற் றுய்வா
யுழுதுகாண் டுளைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்க்
கொடுங்கண் ணேறி மகளி ரோச்சிய
தொடிமா ணுலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையொ டிரட்டுங்
குன்றுபின் னொழியப் போகி யுரந்துரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தெனாது
துனைபரி துரக்குந் துஞ்சாச் செலவி
னெம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணோங்குயர் நல்லி லொருசிறை நிலைஇயர்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோ ளெய்திக்

க.—களிற்றியானை நிரை.

கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் பெஃகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புநுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்பட ரன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன தீம்புழல் துய்வாய்
உழுதுகாண் துளைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்க்
கொடுங்கண் ணேற்றி மகளி ரோச்சிய
தொடிமா ணுலக்கைத் தூண்டுரப் பாணி
நெடுமால் வரைய குடிஞையொ டிரட்டுங்
குன்றுபின் னொழியப் போகி யுரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தென்னாது
துனைபரி துரக்குந் துஞ்சாச் செலவி
னெம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணோங்குயர் நல்லி லொசிநிலை நிலைஇயர்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோ ளெய்திக்

அகநானூறு.

கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகத் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோ ணணைசஇச் சென்மவென் னெஞ்சே.

எ-து, வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. (௯)

க.— களிற்றியானைநிரை.

வான்கட் பரப்பிற் றூவற் கெதிரிய
மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த
முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப்
புள்ளிறை கூரு மெல்லம் புலம்ப
நெய்த லுண்கண் பைதல கலுழப்
பிரித லெண்ணினை யாயி னன்று
மரிதுதுற் றனையாற் பெரும வுரிதினிற்
கொண்டாங்குப் பெயர்தல் வேண்டுங் கொண்டலொடு
குரூஉத்திரைப் புணரி யுடைதரு மெக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டுமண லடைகரைக் கோட்டுமீன் கெண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி யன்னவிவ ணலனே.

எ-து, இரவுக்குறிவந்து தலைமகளைக் கண்ணுற்றுநீங்குந் தலைமகனை எதிர்ப்பட்ட தோழி சொல்லியது.

அம்மூவனார். (௧௦)

க.— களிற்றியானை நிரை.

கக வான மூர்ந்த வயங்கொளி மண்டில
நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட்
டிலையில மலர்ந்த முகையி லிலவங்
கலிகொ ளாயம் மலிபுதொகு பெடுத்த
வஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்துக ளாகிய பயந்தபு கான
மெம்மொடு கழிந்தன ராயிற் கம்மென
வம்புவிரித் தன்ன பொங்குமணற் கானியாற்றுப்
படுசினை தாழ்ந்த பயிலிண ரெக்கர்
மெய்புகு வன்ன கைகவர் முயக்க
மவரும் பெறுகுவர் மன்னே நயவர
நீர்வார் நிகர்மலர் கடுப்ப வோமறந்
தறுகுள நிறைக்குந போல வல்கலு
மழுதன் மேவல வாகிப்
பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே.

என்-து, தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து, ஆற்றாளாய தலைமகளது வேறுபாடுகண்டு ஆற்றா ளாய தோழிக்குத் தலைமகள் யான் ஆற்றுவ லென்பதுபடச் சொல்லியது.

ஔவையார். (கக).

க.— களிற்றியானைநிரை.

யாயே, கண்ணினுங் கடுங்கா தலளே யெந்தையு
நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவ்வில குறுமக ளியங்குதி யென்னும்
யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பி
னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே
யேனலங் காவல ரானா தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயன் கொண்மார்
குறவ ரூன்றிய குரம்பை புதைய
வேங்கை தாய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழ
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரு
நல்வரை நாட நீவரின்
மெல்லியலோருந் தான்வாழலளே.

எ-து, பகற்குறி வாராநின்ற தலைமகன் றோழியால் செறிப்பு அறிவுறுக்கப்பட்டு இரவுக்குறிவாரா வரைவலென்றற்கு அதுவும் மறுத்து வரைவுகடாயது.

இப்பாட்டினுள் 'நீவரின்' என்பது வரவு மறுத்தது.
'சீறடிசிவப்ப' என்பது செறிப்பு அறிவுறீஇயது.

கபிலர் (கஉ)

க.— களிற்றியானைநிரை.

௧௩. தன்கடற் பிறந்த முத்தி னாரமு
முனைதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத்
தெறலரு மரபிற் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தி னாரமு
மிருபே ராரமு மெழில்பெற வணியுந்
திருவீழ் மார்பிற் றென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியி னுணர்த்துஞ் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி யிரவலர்க் கீயும்
வல்வா யம்பின் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயங்கெழு வேள்வியின்
விழுமிது நிகழ்வ தாயினுந் தெற்கேர்பு
கழிமழை பொழிந்த பொழுதுகொ ளமையத்துச்
சாய லின்றுணை யிவட்பிரிந் துறையி
நோயின் றாக செய்பொருள் வயிற்பட
மாசி றாமரை விரிந்த செக்கர்க்
கவவின் புறமைக் கழிக வல்வா
யழுவதி யன்ன தோகை யொன்ற
கழனி நெல்லின் கவைமுத லலங்க
விரம்பகன் செறுவின் வரம்பணையாத் துயல்வரப்
புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை
யிலங்குபூங் கரும்பி னேர்கழை யிருந்த
வெண்குருகு நரல வீசு
நுண்பஃ றுவலைய தண்பனி நாளே.

எ-து, பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனெ்.

அகநானூறு.

தோழி செலவழுங்குவித்தது.

பெருந்தலைச்சாத்தனார். (௧௩)

க.— களிற்றியானை நிரை.

அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுட
னீயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய
வங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும்பொறை மருங்கி னறும்பூ வயரப்
பதவுமேய லருந்து மதவுநடை நல்லான்
வீங்குமாண் செருத்த றீம்பால் பிலிற்றக்
கன்றுபயில் குரல மன்றுநிறை புகுதரு
மாலையு முள்ளா ராயிற் காதல
யாங்கா குவங்கொல் பாண வென்ற
மனையோள் சொல்லெதிர் சொல்லல் செல்வேன்
செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுண் மெய்ந்நிறுத்
தவர்திறஞ் செல்வேன் கண்டனென் யானே
விடுவிசைக் குதிரை விலங்குபரி முடுகக்
கல்பொரு திரங்கும் பல்லார் நேமிக்
கார்மழை முழக்கிசை கடுக்கு
முனைநல் லூரன் புனைநெடுந் தேரே.

என்-து, பாணன் தனக்குப் பாங்காயினோர் கேட்பச் சொல்லியது.

ஒக்கூர் மாசாத்தியார். (கச)

க.— களிற்றியானைநிரை.

எம்வெங் காம மியைவ தாயின்
மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவிற் றுளுநா டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்
செறிந்த சேரிச் செம்மன் மூதூ
ரறிந்த மாக்கட் டாகுக தில்ல
தோழி மாரும் யானும் புலம்பச்
சூழி யானைச் சுடர்ப்பூ ணன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர்ச்
செறிந்த காப்பிகந் தவனொடு போகி
யத்த விருப்பை யார்கழல் புதுப்பூத்
துய்த்த வாய துகணிலம் பரப்பக்
கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி
வன்கை யெண்கின் வயநிரை பரக்கு
மின்றுணைப் பயந்த கொள்கையொ டொராங்குக்
குன்ற வேயிற் றிரண்ட வென்
மென்றோ ளஞ்ஞை சென்ற வாறே.

எ-து. மகட் போக்கிய தாய் சொல்

லியது.

மாமூலனார் (௧௫)

க.— களிற்றியானைநிரை.

கசா நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதி னல்லி யயலிதழ் புரையு
மாசி லங்கை மணிமரு ளவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவருங்
காணுந ரின்மையிற் செத்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை
வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டன ணின்றோட் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமகள் ளெவன்பே துற்றனை
நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனள் கைவிலக்
கிளவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா
நாணி நின்றோ ணிலைகண் டியானும்
பேணினெ னல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவு ளன்னோ ணின்
மகன்றா யாதல் புரைவதா லெனவே.

எ-து, பரத்தையர் சேரியிற் சென்றுவந்த தலைமகன் யாரையும் அறியேனென்றற்குத் தலைமகள் சொல்லியது.

சாகலாசனார். (கசா)

க.— களிற்றியானைநிரை.

வளங்கெழு திருநகர்ப் பந்துசிறி தெறியினு
மிளந்துணை யாயமொடு கழங்குட னாடினு
முயங்கின் றன்னையென் மெய்யென் றசைஇ
மயங்கிறாயர் பொலிந்த ஆதல டன்னனை
முயங்கினள் வதியு முன்னே யினியே
தொடிமாண் சுற்றமு மெம்மு முள்ளா
ணெடுமொழித் தந்தை யருங்கடி நீவி
யொருமை லாளை னெஞ்சுறப் பெற்றவென்
இயமுதுக் குறைவி சிலம்பார் சீறடி
வல்லகொல் செல்லத் தாமே கல்லென
ஆனெழுந் தன்ன வருகெழு செலவி
னீரி லத்தத் தாரிடை மடுத்த
கொடுங்கோ லுமணர் பகடுதெழி தெள்விளி
நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள வியம்புங்
கடுங்கதிர் திருகிய வேய்பயால் பிறங்கற்
பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலை யதர்படு மருங்கி
னீளரை யிலவத் தங்குழி பன்மலர்
வழவுத்தலைக் கொண்ட பழவறன் மேதார்
நெய்யுமிழ் சுடரிற் கால்பொரச் சில்கி
வைகுறு மீனிற் றோன்று
மைபடு மாமலை விலங்கிய சுரனே.

எ-து, மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

கயமனார். (௧எ)

க.—களிற்றியானைநிரை.

18 நீர்நிறங் கரப்ப வூழுறு புதிர்ந்து
பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்றுக்
கராஅந் துஞ்சுங் கல்லுயர் மலிசுழி
மராஅ யானை மதந்தப வொற்றி
யுராஅ வீர்க்கு முட்குவரு நீத்தங்
கலங்கட் பணியி னடுங்காது துணிந்து
நாம வருந்துறைப் பேர்தந் தியாமுந்
தீங்கும் வருபவோ வோங்கல் வெற்ப
வொருநாள் விழும முறினும் வழிநாள்
வாழ்குவ ரல்லரென் றோழி யாவதும்
ஊறில வழிகளும் பயில வழங்குநர்
நீடின் றுக விழுக்குவ ரதனு
உலமரல் வருத்த முறுதுமெம் படப்பைக்
கொழுங்கோ ளிழைத்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பிற் காந்தளம் பொதும்பிற்
பகனீ வரினும் புணர்குவை யகன்மலை
வாங்கமைக் கண்ணிடை கடுப்பயா
யோம்பின ளெடுத்த தடமென் றோளே.

எ-து, தோழி இரவுவந்தானைப் பகல்வர வென்றது.

கபிலர். (௧௮)

க.— களிற்றியானைநிரை.

அன்றவ ணொழிந்தன்று மிலையே வந்துநனி
வருந்தினை வாழியெ னெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்றும் யாவுயர் நனந்தலை
யுருவிடை மருளியிற் பொருடெறிக் கிளைக்குங்
கருங்குரற் குடிஞைய நெடும்பெருங் குன்ற
மெம்மோ டிறத்தலுஞ் செல்லாய் பின்னின்
றொழியச் சூழ்ந்தனை யாயிற் றவிராது
செல்லினிச் சிறக்கநின் னுள்ளம் வல்லே
மறவ லோம்புமதி யெம்மே நறவின்
சேயித ழனைய வாகிக் குவளை
மாயிதழ் புரைய மலிர்கொ ளீரிமை
யுள்ளகங் கனல வுள்ளுதோ றுலறிப்
பழங்கண் கொண்ட கதழ்ந்துவீ ழவிர்தல்
வெய்ய வுகுதர வெரீஇப் பையெனச்
சில்வளை சொரிந்த மெல்லிறை முன்கை
பூவீ கொடியிற் புல்லெனப் போகி
யடர்செ யாயகற் அடர்துணை யாக
வியங்காது வதிந்தநங் காதலி
யுயங்குசாய் சிறுபுற முயங்கிய பின்னே.

எ-து, பொருள்வயிற் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தில் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

உலோச்சன். (௧௯)

௧.— களிற்றியானைநிரை.

பெருநீ ரழுவத் தெந்தை தந்த
கொழுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி
யெக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூச றூங்கிக்
கொண்ட லிடுமணற் குரவை முனையின்
வெண்டலைப் புணரி யாயமொ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகைப்
பல்பூங் கான லல்கினம் வருதல்
கௌவை நல்லணங் குற்ற விவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
யெல்லையு மிரவு மென்னாது கல்லென
வலவ னாய்ந்த வண்பரி
நிலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே.

ஈ—து. பகற்குறிவந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகன்கேட்பத் தோழி இற்செறிவு உரைத்தது.

பொருந்தி லிளங்கீரனார். (௨௰)

க.— களிற்றியானைநிரை.

௨௧ மனைவளர் நொச்சி மௌவல் வான்முகைத்
துணைநிரைத் தன்ன மாவீழ் வெண்பல்
லவ்வயிற் றகன்ற வல்குற் சிறுபிடித்
தாழ்மென் கூந்தற் றடமென் பணைத்தோண்
மடந்தை மாணலம் புலம்பச் சேய்நாட்டுச்
செல்லல் லென்றியான் சொல்லவு மொல்லாய்
வினைநயந் தமைந்தனை யாயின் மனைநகப்
பல்வேறு வெறுக்கை தருகம் வல்லே
யெழுமதி வாழிய நெஞ்சே புரியிணர்
மெல்லவ லிருஞ்சினை புலம்ப வல்லோன்
கோடறை கொம்பின் வீயுகத் தீண்டி
மராஅ மலைத்த மணவாய்த் தென்றல்
சுரஞ்செல் மள்ளர் சுரியற் றாழ
மென்றாழ் நின்ற புன்றலை வைப்பிற்
பருந்திளைப் படூஉம் பாறுதலை யோமை
யருங்கல் விடரகத் தீன்றிளைப் பட்ட
மென்புனிற் றம்பிணவுப் பசித்தெனப் பைங்கட்
செந்நா யேற்றை கேழ லுழக்க
வரியதட் பிணவ னிண்டவித் பரீஇச்
செங்கா யுதிர்ந்த பைங்குலை யீந்தின்
பரன்மட் சுவல முரணில முடைத்த
வல்வாய்க்
வரியதட் கணிச்சிக் கூழார் கோவல

அகநானூறு:

...ற திட்ட வயலைக் கூவல்

...ண்கோடு உயர்த்த வன்பில் கானவ

...ழ்ந்தியங் கியவி னகழ்ந்த குழிசெத்

...தங்கனிக் கினகிளை ஆர்க்கும்

...ருங்கவ் லத்தம் விலங்கிய காடே.

என்-து, பொருள்வலிக்கப்பட்டுப் பிரிந்த

...லமகன் இடைச்சுரத்து மீளலுற்ற

...நெஞ்சினைக் கழறியது.

காவன்முல்லைப் பூதனார். (உக)

௧.— களிற்றியானை நிரை.

அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதருங்
கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்
இதுவென வறியா மறுவரற் பொழுதிற்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவ ளிவளென
முதுவாய்ப் பெண்டி ரதுவாய் கூறக்
களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநாள்
ஆரநாறு மருவிடர்த் ததைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவல ரறியாமைத்
தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனெ னல்லெனோ யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவீண்
டேதில் வேலற் குலந்தமை கண்டே.

எ-து, வரைவிடைவைத்துப் பிரிந்த காலத்துத் தலைமக ளாற்றாளாகத் தோழி தலைமகனை யியற்பழித்துத் தலைமக ளியற்பட மொழிந்தது.

வெறிபாடிய காமக்கண்ணியார். (௨௨)

க.— களிற்றியானைநிரை.

மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்
பாடுலந் தன்றே பறைக்குர லெழிலி
புதன்மிசைத் தளவி னிதன்முட் செந்நனை
நெருங்குகுலைப் பிடவமொ டொருங்குபிணி யவிழக்
காடே கம்மென் றன்றே யவல
கோடுடைந் தன்ன கோடற் பைம்பயிர்
பதவின் பாவை முனைஇ மதவுநடை
யண்ண லிரலை யமர்பிணை தழீஇத்
தண்ணற லருகித் தாழ்ந்துபட் டனவே
யனையகொல் வாழி தோழி மனைய
தாழ்வி னொச்சி சூழ்வன மலரு
மௌவன் மாச்சினை காட்டி
யவ்வள வென்றா ராண்டுச்செய் பொருளே.

எ-து, தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ஓரோடகத்துக் கந்தரத்தனார். (உ௩)

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந் தொழிந்த கொழுந்தி னன்ன
தளைபிணி யவிழாச் சுரிமுகிழ்ப் பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலருந்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குன் மாமழை வென்புலம் படரும்
பனியிருங் கங்குலுந் தமிய ணீந்தித்
தன்னூ ரோளே நன்னுத லியாமே
கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து
துதிமுக மழுங்கிய மண்ணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா வொண்மணி
கழிப்பிணிக் கறைத்தோற் பொழிகணை யுதைப்புழித்
தழங்குகுரன் முரசமொடு மயங்கும் யாமத்துக்
கழித்துறைச் செறியா வாளுடை யெறுழ்த்தோ
ளிரவுத் துயின் மடிந்த தானை
யுரவுச்சின வேந்தன் பாசறை யேமே.

எ-து, தலைமகன் பருவங்கண்டு சொல்லியது.
வினைமுற்றியதலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியதூஉ மாம்.

ஆவூர் மூலங்கிழார். (உச)

க.— களிற்றியானைநிரை.

நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅ
யவிரறல் கொண்ட விரவுமண லகன்றுறைத்
தண்கய நண்ணிய பொழில்தொறுங் காஞ்சிப்
பைந்தா தணிந்த போதுமலி யெக்கர்
வதுவை நாற்றம் புதுவது கஞல
மாநனை கொழுதிய மணிநிற விருங்குயில்
படுநா விளியா னடுநின் றல்கலு
முரைப்ப போல வூழ்கொள்பு கூவ
வினச்சிதர் உகுத்த விலவத் தாங்கட்
சினைப்பூங் கோங்கி னுண்டாது பகர்நர்
பவழச் செப்பிற் பொன்சொரிந் தன்ன
விகழுந ரிகழா விளநா ளமையஞ்
செய்தோர் மன்ற குறியென நீநின்
பைத லுண்கண் பனிவார் புறைப்ப
வாரா மையிற் புலந்த நெஞ்சமொடு
நோவற் குறுமக ணோயியரென் னுயிரென
மெல்லிய வினிய கூறி வல்லே
வருவர் வாழி தோழி பொருநர்
செல்சமங் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதிய
னின்னிசை யியத்திற் கறங்குங்
கன்முகை யருவிய காடிறந் தோரே.

எ-து, பருவங்கண்டு அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன். (உரு)

க.— களிற்றியானைநிரை.

கூன்முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற
மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்
பொய்தன் மகளிர் விழவணிக் கூட்டு
மவ்வய லண்ணிய வளங்கே ழூரனைப்
புலத்தல் கூடுமோ தோழி யல்கற்
பெருங்கதவு பொருத யானை மருப்பி
னிரும்புசெய் தொடியி னேர வாகி
மாக்க ணடைய மார்பகம் பொருந்தி
முயங்கல் விடாஅ லிவையென மயங்கி
யானோ மென்னவு மொல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே
இனியே, புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்
திதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந்து (நணி) புலர்ந்த கேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுதல் றாமஞ் சினரே, ஆயிடைக்
கவவுக்கை நெகிழ்ந்தமை (போற்றி) நோக்கி மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க் கொத்தனிர் நீயி ரிஃதோ
செல்வற் கொத்தன மியாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தேனே யதுகண்

டியாமுங் காதல மலர்கெனச் சாஅய்ச்
சிறுபுறங் கவையின னாக வுறுபெயற்
றண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
உரு. மண்போ னெகிழ்ந்தவற் கலுழ்ந்தே
நெஞ்சறை போகிய வறிவி னேற்கே.

எ-து, தலைமகன் தோழியை வாயில் வேண்டி அவளால் தான் வாயில் பெறாது ஆற்றாமையே வாயிலாகப் புக்குக் கூடிய தலைமகனது நீக்கத்துக்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப்பெருவழுதி. (உசு)

அத்தனிர் = பதுக்கிவைக்கப்பட்டுளிர்
[illegible]
சிறுபுறம் - முதுகு -

க.— களிற்றியானை நிரை.

உஎ கொடுவரி யிரும்புலி தயங்க நெடுவரை
யாடுகழை யிருவெதிர் கோடைக் கொல்குங்
கானங் கடிய வென்னார் நாமழ
நின்றதில் பொருட்பிணிச் சென்றிவட் டருமார்
செல்ப வென்ப வென்போய் நல்ல
மடவை மன்ற நீயே வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட் டியானை
மறப்போர்ப் பாண்டிய ரறத்திற் காக்குங்
கொற்கையம் பெருந்துறை முத்தி னன்ன
நகைப்பொலிந் திலங்கு மெயிறுகெழு துவர்வாய்
தகைப்பத் தங்கல ராயினு மிகப்ப
யாங்ஙனம் விடுமோ மற்றே தேம்படத்
தெண்ணீர்க் கேற்ற திரள்காற் குவளைப்
பெருந்தகை சிதைத்து மமையாப் பருந்துபட
வேத்தமர்க் கடந்த வென்றி நல்வேல்
குருதியொடு துயல்வந் தன்னநின்
னரிவேய் யுண்க ணமர்த்த நோக்கே.

என்பது, செலவுணர்ந்து வேறுபட்ட தலைமகட்குத்
தோழி சொல்லியது.

மதுரைக் கணக்காயனார். (உஎ)

க.— களிற்றியானை நிரை.

௨௮ மெய்யிற் றீரா மேவருங் காமமொ
டெய்யா யாயினு முரைப்ப றோழி
கொய்யா முன்னுங் குரல்வார்பு தினையே
யருவி யார்ந்த (ன்ற) பைங்கா றோறு
மிருவி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்
பரிப்பன் னாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
யாங்காங் கொழுகா யாயி னன்னை
சிறுகிளி கடிதல் றேற்றா ளிவளெனப்
பிறர்த்தந்து நிறுக்குவ ளாயி
னுறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே.

எ-து, தலைமகன் சிறைப்புறத்தா
னாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த்
தோழி சொல்லியது. பகலே சிறைப்புறம்.

(௨௮)

பாண்டியன் அறிவுடை நம்பி.

க.— களிற்றியானைநிரை.

௨௯. தொடங்குவினை தவிரா அசைவி னோன்றாட்
கிடந்துயர் மறுகுவ தாயினு மிடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த
தாழ்வி லுள்ளந் தலைத்தலைச் சிறப்பச்
செய்வினைக் ககன்ற காலை யெஃகுற்
றிருவே றாகிய தெரிதகு வனப்பின்
மாவி னறுவடி போலக் காண்டொறு
மேவ றண்டா மகிழ்நோக் குண்க
ணினையாது கழிந்த வைக லெனையதூஉம்
வாழலேன் யானெனத் தேற்றிப் பன்மாண்
டாழக் கூறிய தகைசா லன்மொழி
மறந்தனிர் போறி ரெம்மெனச் சிறந்தநின்
னெயிறுகெழு துவர்வா யின்னகை யழுங்க
வினவ லானாப் புனையிழை கேளினி
வெம்மை தண்டா வெரியுகு பறந்தலைக்
கொம்மை வாடிய வியவுள் யானை
நீர்மருங் கறியாது தேர்மருங் கோடி
யறுநீ ரம்பியி னெறிமுத லுணங்கு
முன்னுநர்ப் பனிக்குந் துக்கருங் கடத்திடை
யெள்ளா லெனைப் பொருடரல் விருப்பொடு
நாணுத்தளை யாக வைகி மாண்வினைக்
குடம்பா டொழிந்தமை யல்லது
மடங்கெழு நெஞ்ச நின்னுழை யதுவே.

என்-து, வினைமுற்றி மீண்ட தலைமகன் 'எம்மையும் நினைத்து அறிதிரோ' என்ற தலைமகட்குச் சொல்லியது

வெண்வட்டீயார். (௨௯)

௪.— களிற்றியானைநிரை.

நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலைக்
கடல்பா டழிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்க
ளிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றி
யுப்பொ யுமண ரருந்துறை போக்கு
மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
யயிர்திணி யடைகரை யொலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த வுழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
பாடுபல வமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறைவ
பெருமை யென்பது கெடுமோ வொருநாண்
மண்ணா முத்த மரும்பிய புன்னைத்
தண்ணறுங் கானல் வந்துநும்
வண்ண மெவனோ வென்றனிர் செலினே.

எ-து. பகற்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன். (௱௨௰)

க.— களிற்றியானை நிரை.

நெருப்பெனச் சிவந்த வுருப்பவிர் மண்டிலம்
புலங்கெட மடங்கத் தெறுதலின் ஞொள்கி
நிலம்புடை பெயர்வ தன்றுகொ லின்றென
மன்னுயிர் மடிந்த மழைமா றமையத்
திலையில வோங்கிய நிலையுயர் மராஅத்து (யாஅ)
மேற்கவட் டிருந்த பார்ப்பினங் கட்குக்
கல்லுடைக் குறும்பின் வயவர் வில்லிட
நிணவரிக் குறைந்த நிறத்த வதர்தொறுங்
கணவிர மாலை யிடூஉக் கழிந்தன்ன
புண்ணுமிழ் குருதி பரப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுகின் கானம் நீந்திச்
சென்றோர் மன்ற தோழி வென்றியொடு (றனர்)
வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கு
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே.

எ-து, பிரிவிடை ஆற்றாளாயினளென்று பிறர் சொல்லக் கேட்டு வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

மாமூலனார். (௩௧)

ஞொள்கி

தமிழ்கெட்டு மூவர்

க.— களிற்றியாணைநிரை.

நெருநலெல்லை யேனற் றோன்றித்
திருமணி யொளிர்வரும் பூணன் வந்து
புரவலன் போலுந் தோற்ற முறழ்கொள
இரவலன் மாக்களிற் பணிமொழி பயிற்றிச்
சிறுதினைப் படுகிளி கடீஇயர் பன்மாண்
குளிர்கொ டட்டை மதனில புடையாச்
சூரர மகளிரி னின்ற நீமற்
றியாரை யோவெம் மணங்கியோ யுண்கெனச்
சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டிகுபெயன் மண்ணி ஞெகிழ்பஞ ருற்றவென்
னுள்ளவ னறித லஞ்சி யுள்ளில்
கடிய கூறிக் கைபிணி விடாஅ
வெரூஉமான் பிணையி னொரீஇ நின்றவென்
னருந்தகை மையிற் பெயர்த்துப் பிறி தென்வயிற்
சொல்லல் வல்லிற்று மிலனே யல்லாந்
தினந்தீர் களிற்றிற் பெயர்ந்தோ னின்றுந்
தோலா வாறில்லை தோழி நாஞ் சென்மோ
சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே
மாசின் றாதலு மறியா னேசற்
றென்குறைப் புறனிலை முயலு மண்
கணாளனை நகுகம் யாமே.

எ-து, பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது. நல்வெள்ளியார். (௩௨)

தொல், பொருளியல் 24, 25 - ம் உரையுளது

வினைநன் றாதல் வெறுப்பக் காட்டி
மனைமாண் கற்பின் வாணுத லொழியக்
கவைமுறி யிழந்த செந்நிலை யாஅத்
தொன்றோங் குயர்சினை யிருந்த வன்பறை
வீளைப் பருந்தின் கோள்வல் சேவல்
வளைவாய்ப் பேடை வருதிசம் பயிரு
விளிசேய்த் தீங்குர லிசைக்கு மத்தஞ்
செலவருங் குரைய. வென்னாது சென்றவ
மலர்பா டான்ற மையெழின் மழைக்கட்
டெளியா நோக்க முள்ளலெ யுளிவாய்
வெம்பர லதர குன்றுபல நீந்தி
யாமே தமியே மாக நீயே
யொழியச் சூழ்ந்தனை யாயின் முனாஅது
வெல்போர் வாணவன் கொல்லி மீமிசை வாணவன் கொல்லி
நுணங்கமை புரையும் வணங்கிறைப் பணைத்தோள்
வரியணி யல்குல் வாலெயிற் றோள்வயிற்
பிரியா யாயினு நன்றுமற் றில்ல
வன்றுநம் மறியா யாயினு மின்றுநஞ்
செய்வினை யாற்றுற விலங்கி
னெய்துவை யல்லையோ பிறர்நகு பொருளே.

எ—து, தலைமகன் இடைச்சுரத்துத்
தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் (௩௩)

சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல்
கண்ணியின் மலருந் தண்ணறும் புறவிற்
றொடுதோற் கானவன் கவைபொறுத் தன்ன
விருதிரி மருப்பி னண்ண லிரலை
செறியிலைப் பதவின் செங்கோன் மென்குரன்
மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்தித்
தெள்ளற றழீஇய வார்மண லடைகரை
மெல்கிடு கவுள அஞ்சுபுறங் காக்கும்
பெருந்தகைக் குடைந்த நெஞ்ச மெமுறச்
செல்க தேரே நல்வலம் பெறுந!
பகைகொண் மெல்விரல் பெருந்தோட் புலத்தி
துறைவிட் டன்ன தூய்மயி ரெகினத்
துணையொடு திளைக்குங் காப்புடை வரைப்பிற்
செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி [illegible]
யண்டவரி னாடுமோ சென்றிசினோர் திறத்தென
வல்லவ [illegible] லஞ்சி மெல்லென
லம்பூலே யான்சொற் பயிற்று
நாணுடை யரிவை மாணலம் பெறவே.

எ-து, வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பா
கற்குச் சொல்லியது.

மதுரை மருதனிளநாகன். ௩௪

க.— களிற்றியானை நிரை.

ஈன்று புறந் தந்த வெம்மு முள்ளாள் [தொ-பொ-60]
வான்றோ யிஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை
நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந்
துணிந்து பிற ளாயின ளாயினு மணிந்தணிந்
தார்வ நெஞ்சமொ டாய்நல னளைஇத் தன்
மார்புதுணை யாகத் துயில்க தில்ல
துஞ்சா முழவிற் கோவற் கோமான் கோவலூர்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப் காரி.
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கு பெண்ணையாறு
நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே.

என்-து, மகட்போக்கிய நற்றாய்
தெய்வத்திற்குப் பராயது.

அம்மூவனார். .௩௫.

க.— களிற்றியானைநிரை.

பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்துக் [தொ. 390, 782]
கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி
யாம்பன் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந்
தரில்படு வள்ளை யாய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்கவா ராது ×
கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு
நாட்கய முழக்கும் பூக்கே ழூர
வருபுனல் வையை வார்மண லகன்றுறைத் — வையை.
திருமரு தோங்கிய விரிமலர்க் காவி — மருதோங்கா.
ணறும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிரொடு
வதுவை யயர்ந்தனை யென்ப வலரே
கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய — செழியன் ஆலங்கானம்
னாலங் கானத் ~~தகன்~~ கன்றலை சிவப்பச் — சேரலன். செம்பியன் திதியன்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன் — எழினி.
போர்வே லியானைப் பொலம்பூ ணெழினி — எருமையூரன்.
நாரரி நறவி னெருமை யூரன்
தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி
னிருங்கோ வேண்மா னியற்றேர்ப் பொருநனென் — இருங்கோவேள் பொருநன்
றெழுவர் நல்வல மடங்க வொருபகன்
முரைசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரரா ரார்ப்பினும் பெரிதே.

௩௬. பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்துக் [தொ 390, 782]
கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி
யாம்பன் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந்
தரில்படு வள்ளை யாய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்கவா ராது
கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு
நாட்கய முழக்கும் பூக்கே ழூர
வருபுனல் வையை வார்மண லகன்றுறைத் வைகை.
திருமரு தோங்கிய விரிமலர்க் காவி மருதோங்க.
னறும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிரொடு
வதுவை யயர்ந்தனை யென்ப வலரே
கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய செழியன்
னாலங் கானத் ~~தஞ்சு~~ கன்றமலை சிவப்பச் இலங்கானை சேரலன். செம்பியன் திதியன்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வ லியானைப் பொலம்பூ ணெழினி எழினி.
நாரரி நறவி னெருமை யூரன் எருமையூரன்.
தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி
னிருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென் இருங்கோவே பொருநன்
றெழுவர் நல்வல மடங்க வொருபகன்
முரைசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரரார்ப்பினும் பெரிதே.

அகநானூறு.

என்-து, தலைமகன் பரத்தையிற் பிரிந்துவந்
தலைமகள் புலந்து சொல்லியது.

மதுரை நக்கீரர். ௩௬

க.— களிற்றியானைநிரை.

௩௭ மறந்தவ ணமைகுவ ராயினுங் கறங்கிசைக் [அக-நா-29]
கங்குல் ஓதைக் கலிமகி ழுழவர்
பொங்கழி முகந்த தாவி னுண்டுகண்
மங்குல் வானின் மாதிர மறைப்ப
௫. வைகுபுலர் விடியல் வைபெயர்த் தாட்டித்
தொழிற்செருக் கனந்தர் வீட வெழிற்றகை
வளிபொரு சினைய வண்டளிர் மாஅத்துக்
கிளிபோல் காய கிளைத்துணர் வடித்துப்
புளிப்பத னமைத்த புதுக்குட மலிர்நிறை
௰ வெயில்வெரீஇ யத்த பயலிதழ்ப் பகுவாய்க் குடைக்
கயமண்டு பகட்டிற் பருகிக் காண்வரக்
கொள்ளொடு பயறுபால் விராஅய் வெள்ளிக்
கோல்வரைந் தன்ன வாலவிழ் வியன்புலத்து
வாங்குகை தடுத்த பின்றை யோங்கிய
பருதியங் குப்பை சுற்றிப் பகல்செல
மருதமர நிழ லெருதொடு வதியுங்
காமர் வேனின் மன்னிது
மாணல நுகருந் துணையுடை யோர்க்கே.

எ-து தலைமகள் தோழிக்கு வன்பொறை எதிரழிந்து சொல்லியது.

பொங்கழி யென்பது தூற்றாப்பொலி.

விற்றூற்று மூதெயினனார். ௩௭.

க.— களிற்றியானை நிரை.

அ எரியணர் வேங்கை வண்டுபடு கண்ணியன் [தொ-கள-283, 332]
தெரியிதழ்க் குவளைத் தேம்பாய் தார
னஞ்சிலை யாடவ னாக வெஞ்செலம்
கணைவலந் தெரிந்து துணைபடர்ந் துள்ளி
ரு. வருதல் வாய்வது வான்றோய் வெற்பன்
வந்தன ளுயா. னந்தளிர்ச் செயலைத்
தாழ்வி லோங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்
றூசன் மாறிய மருங்கும் பாய்புட பாய்ந்து
ளாடா மையிற் கலுழ்பில தேகி கலங்கில ஏனித்து
க0. நீடிதழ்க் கலைஇய கவின்பெறு நீலங்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை
மடக்கிளி யெடுத்தல் செல்லாத் தடக்குரற்
குலவுப்பொறை யிறுத்த கோற்றலை யிருவி
கொய்தொழி புனமு நோக்கி நெடிதுநினைந்து
கரு பைதலன் பெயர்குவன் கொல்லோ வைகேய்
கயவெள் ளருவி சூடிய வுயர்வரைக்
கூஉங் கணஃ தெம் மூரென
வாங்கதை யறிவுறன் மறந்திசின் யானே.

எ-து, தோழி தலைமகன் குறை கூறியது. பகலே
சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவா
ளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியதூஉமாம்
தோழி குறிபெயர்த்திடுதல் சொல்லியதூஉமாம்.

வடமவண்ணக்கன் பெரிசாத்தன். (ருஅ)

க.— களிற்றியானைநிரை.

ஒழிந்தப் பழிந்த நெஞ்சமொடு வழிப்படர்ந் [அக-நா-364]
துள்ளியு மறிதிரோ வெம்மென யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவ லழுங்க
நோய்முந் துறுத்து நொதுமலர் மொழியநின்
ஆய்நல மறப்பெனோ மற்றே சேணிகந்
தொலிகழை நிவந்த நெலிசொரி யொண்பொறி
படுஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுன மீமிசை வளிசுழற் றுறாஅலிற்
காடுபடு (கவர்) கடுந்தீ (பெரு) யோடுவயி னோடலி
னதர்கெடுத் தலறிய சாத்தொ டொராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழந்
திறந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்றால் பட்டெனக்
கட்பட ரோதி நிற்படர்ந் துள்ளி
யருஞ்செல வாற்றா வாரிடை ஞெரேரெனப்
பரந்துபடு பாய நவ்வி (பட்டெ) யிருந்தென
வலங்குவளை செறியா விருத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்
டின்னகை யினைய மாதரு மெய்வயி
னாடல் யாங்குவந் தன்றென யாழநின்

அகநானூறு.

கோடேந்து ~~[illegible]~~ புருவமொடு குவவுநுதனீவி

நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து

வருங்கை காட்டிய வாயல் கனவி

னேற்றேக் கற்ற வுலமரல்

போற்றா யாகலிற் புலத்தியா லெம்மே.

என்பது பொருண்முற்றிய தலைமகன் தலைமகளைக்

கண்டு சொல்லியது.

இப்பாட்டு நிலத்தாற் பாலை.

மதுரைச் செங்கண்ணனார். ௩௯.

க.— களிற்றியானைநிரை.

கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப அக-ம-௪ ௧௭
நீர்திகழ்ப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனார் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
வசைவண் டார்க்கு மல்குறு காலைத்
தாழை தளரத் தூக்கி மாலை
யழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சங் கையற வினையத்
துயரஞ் செய்தம் மருளா ராயினு
மறாஅ லியரோ வவருடைக் கேண்மை
யளியின் மையி னவணுறை (ய) முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் லரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய் தடந்தா ணாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிய் பெண்ணை
யகமடற் சேக்குந் துறைவ
னின்றுயின் மார்பிற் சென்றவென் னெஞ்சே.

என்-து, தலைமகன் பொருள்வயிற் பிரிந்த வழி கிழத்தி தோழிக்குச் சொல்லியது. ௪௰

குன்றியன்.

க.—களிற்றியானைநிரை.

வைகுபுலர் விடியல் மைபுலம் பரப்பக்
கருநனை யவிழ்ந்த வூழுறு முருக்கி
னெரிமருள் பூஞ்சினை யினச்சிதர் ஆர்ப்ப வண்டு
நெடுநெல் லடைச்சிய கழனி யேர்புகுத்துக்
குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர
வரிகால் போழ்ந்த தெரிபகட் டுழவ
ரோதைத் தெள்விளி புலந்தொறும் பரப்பக்
கோழிண ரெதிரிய மரத்த கவினிக்
காடணி கொண்ட காண்டகு பொழுதி
னாம்பிரி புலம்பி னலஞ்செலச் சாஅய்
நம்பிரி பறியா நலனொடு சிறந்த
நற்றோ ணெகிழ வருந்தினள் கொல்லோ
மென்சிறை வண்டின் றண்கமழ் பூந்துணர்த்
தாதின் றுவலை தளிர்வார்ந் தன்ன
வங்களுழ் மாமைக் கிளைஇய
நுண்பல் தித்தி மாஅ யோளே.

எ-து, தலைமகன் பிரிந்தவழித் தி
ருத்தியை நினைந்து சொல்லியது.

(௪க.)

குன்றியன்.

௪௨ மழைபெயற் கலித்த மாரிப் பித்திகத்து
கொயலரு நிலைஇய பெயலொடு மணமுகைச்
செவ்வெரிந் உறழுங் கொழுங்கடை மழைக்கட்
டளிரேர் மேனி மாஅ யோயே
நாடுவறங் கூர நாஞ்சி றுஞ்சக்
கோடை நீடிய பைதறு காலைக்
குன்றுகண் டன்ன கோட்ட யாவையுஞ்
சென்றுசேர் கல்லாப் புள்ள புள்ளி
வென்றாழ் வியன்குள நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த வேம வைகறைப்
பல்லோ ருவந்த வுவகை யெல்லா
மென்னுட் பெய்தந் தற்றே சேணிடை
யோங்கித் தோன்று முயர்வரை
வான்றோய் வெற்பன் வந்த மாறே.

எ-து, தலைமகன் வரைவுமலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கபிலர். (௪௨)

க.— களிற்றியானைநிரை.

௪௩. கடல்முகந்து கொண்ட கமஞ்சூன் மாமழை
சுடர்நிமிர் மின்னொடு வலனேர் பிரங்கி
யென்றூ ழுழந்த புன்றலை மடப்பிடி
கைமாய் நீத்தங் களிற்றொடு படீஇய
நிலனும் விசும்பு நீரியைந் தொன்றிக்
குறுநீர்க் கன்ன லெண்ணுந ரல்லது
கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பரீஇ
தளிமயங் கின்றே யின்குர லெழிலி
யாமே, கொய்யகை முல்லை காலொடு மயங்கு
மையிருங் கான நாறு நறுநுதற்
பல்லிருங் கூந்தன் மெல்லியன் மடந்தை
நல்லெழி லாகஞ் சேர்ந்தன மென்று
மளியரோ வளியர் தாமே யளியி
னின்றவில் பொருட்பிணி போக்கித்த
மின்றுணைப் பிரியு மடமை யோரே.

எ—து, தலைமகள் பொருள்கடைக்கூட்டிய
நெஞ்சிற்குச் சொல்லியது.

மதுரை ஆசிரியன் நல்லந்துவன். (௪௩)

க.— களிற்றியானைநிரை.

சுசு வந்துவினை முடித்த வேந்தனும் பகைவருந்

தந்திறை கொடுத்துத் தமரா யினரே

முரண்செறிந் திருந்த தானை யிரண்டும்

ஒன்றென வறைந்தன பணையே நின்றேர்

ரு. முன்னியங் கூர்திப் பின்னிலை யீயா

தூர்க பாக வொருவினை கழிய

நன்ன னேற்றை நறும்பூ ணத்தி

துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி

பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்

க0. கன்றவர் குழீஇய வளப்பருங் கட்டூர்ப்

பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்

கண்டது நோனா னாகித் திண்டேர்க்

கணைய னகப்படக் கழுமலந் தந்த

பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி

கரு. யழும்பி லன்ன வறாஅ யாணர்ப்

பழம்பன் னெல்லின் பல்குடிப் பரவைப்

பொங்கடி படிகய மண்ணிய பசுமிளைத்

தண்குட வாயி லன்னோள்

பண்புடை யாகத் தின்றுயில் பெறவே.

எ-து, வினைமுடித்து மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

சுசு

~~வெள்ளிவீதியார்.~~

குடவாயிற் கீரத்தனார்.

X

நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை.

பேரர் பழையன்பட

கணையனகப்பட கழுமலம் சென்னி

அழும்பில்

குடவாயில்

௧.— களிற்றியானைநிரை.

௪௫. வாட லுழுஞ்சில் விளைநெற் றந்துணர்
றாடுகளப் பறையி னரிப்பன வொலிப்பக்
கோடை நீடிய வகன்பெருங் குன்றத்து
நீரி லாரற்று நிவப்பன களிற்றட்
டாளி லத்தத் தழுங்குவை புகலுங் ~~(…)~~
காடறந் தனரோ காதலர் மாமை
யரிநுண் பசலை பாஅய்ப் பீரத்
தெழின்மலர் புரைதல் வேண்டு மலரோ
யன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன் — அன்னி குறுக்கைத் திதியன்.
றொன்னிலை முழுமுத றுமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரிய
ரின்னிசை யார்ப்பினும் பெரிதே யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந் + — ஆதிமந்தி
தாதிமந்தி போலப் பேதுற்
றலந்தனெ னுழல்வென் கொல்லோ பொலந்தார்க்
கடல்கால் (டல்) கிளர்ந்த வென்றி (நெடு) நல்வேல் — வானவரம்
வான வரம்ப னடன்முனைக் கலங்கிய
வுடைமதி லோரரண் போல
வஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே.

எ-து. வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

வெள்ளி வீதியார்.

சுசு. சேற்றுநிலை முனைஇய செங்கட் காரா [தொ-பொ. 371, 792.]

ஊர்மடி கங்குலி னோன்றளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டி னீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுட னிரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமல ராரு மூர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்
றுறையிறந் தொளிருந் தாழிருங் கூந்தற்
பிறரு மொருத்தியை யெம்மனைத் தந்து
வதுவை யயர்ந்தனை யென்ப வஃதியாம்
கூறேம் வாழிய ரெந்தை செறுநர்
களிறுடை யருஞ்சமந் ததைய நூறு
மொளிறுவாட் டானைக் கொற்றச் செழியன் செழியன்
பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவெம் அள்ளூர்
மொண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ.

என்பது, வாயில்வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

அள்ளூர் நன்முல்லை. சுசு.

௪௭ அழிவி லுள்ளம் வழிவழி சிறப்ப
வினையிவண் முடித்தன மாயின் வல்விரைந்
தெழுவினி வாழிய நெஞ்சே யொலிதலை
யலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து
௫. கடுவளி யுருத்திய கொடிவிடு கூரெரி
விடர்முகை யடுக்கம் பாய்தலி னுடனியைந்
தமைக்கண் விடுநொடி கணக்கலை யகற்றும்
வெம்முனை யருஞ்சுர நீந்திக் கைம்மிகச்
சுடர்சுடர் கல்சேர்பு மறைய மனைவயி
௰ னொண்டொடி மகளிர் வெண்டிரிக் கொளாஅலிற்
குயநடைப் புறவின் செங்காற் சேவ
னெடுநிலை வியனகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை
யாண்டுளர் கொல்லெனக் கலிழ்வோ ளெவ்வ
௧௫. மிழையணி நெடுந்தேர்க் கைவண் செழியன் செழியன் சிறுமலை.
மழைவிளை யாடும் வளங்கெழு சிறுமலைச்
சிலம்பிற் கூதளங் கமழும் வெற்பின்
வேய்புரை பணைத்தோட் பாய
நோயொடு சாவிட முயங்குகம் பலவே.

எ-து, தலைமகன் இடைச்சுரத்து அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது.

ஆலம்பேரி சாத்தன். ௪௭.

௪௭ அழிவி லுள்ளம் வழிவழிச் சிறப்ப
வினையிவண் முடித்தன மாயின் வல்விரைந்
தெழுமினி வாழிய நெஞ்சே யொலிதலை
யலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து
கடுவளி யுருத்திய கொழுவிடு கூரெரி
விடர்முகை யடுக்கம் பாய்தலி னுடனியைந்
தமைக்கண் விடுநொடி கணக்கலை யகற்றும்
வெம்முனை யருஞ்சுர நீந்திக் கைம்மிகச்
சனை சுடர் கல்சேர்பு மறைய மனைவயி
னொண்டொடி மகளிர் வெண்டிரிக் கொளாஅலிற்
குறுநடைப் புறவின் செங்காற் சேவ
னெடுநில வியனகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை
யாண்டுளர் கொல்லெனக் கலிழ்வோ ளெய்தி
யிழையணி நெடுந்தேர்க் கைவண் செழியன் செழியன் சிறுமலை.
மழைவிளை யாடும் வளங்கெழு சிறுமலைச்
சிலம்பிற் கூதளங் கமழும் வெற்பின்
வேய்புரை பணைத்தோட் பாய
தோளே யணைவிட முயங்குகம் பலவே.

என்-து, தலைமகன் இடைச்சுரத்து அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது.

ஆலம்பேரி சாத்தன். ௪௭.

அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள் [ஞா-வா-326.]
பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு(டல்)
நனிபசந் தனளென வினவுதி யதன்றிறம்
யானுந் தெற்றென வுணரேன் மேனாள்
மலிபூஞ் சாரலென் றோழி மாரோ
டொலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூச றோன்ற
வொண்செங் கழுநீர்க் கண்போ லாயிதழ் (ழ்)
(ஊ)
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்ல னொருகணை தெரிந்துகொண்
டியாதோ மற்ற மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே யவற்கண்
டெம்முள் ளெம்முண் மெய்ம்மறை பொருந்தி
நாணி நின்றன மாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்த லாய்நுதல்
மையீ ரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யு முளவோ வென்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேர னெதிர்மறுத்து

நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச்

சென்றோன் மன்றவக் குன்றுகிழ வோனே

பகன்மா யந்திப் படுசுட ரமையத்

தவன்மறை தேஎ நோக்கி மற்றிவன்

மகனே தோழி யென்றன

ளி
ளதனள வுண்டுகொண் மதிவல் லோர்க்கே.

எ—து, செவிலிக்குத் தோழி அறத்

தொடு நின்றது.

கோவுண்ணீர். சுஅ.

௪௯ கிளியும் பந்துங் கழங்கும் வெய்யோ [தொ-கை-78]

மியல்பு
ளளியு மன்புஞ் சாயலு மெரு
முன்னாட் போலா ளிறீஇயரென் னுயிரெனக்
யின்
கொடுந் தொடைக் குழவியொடு வயின்மரத் தியாத்த
கடுங்கட் கறவையிற் சிறுபுற நோக்கிக்
வந்து
குறுகச் சென்று குவவுநுதல் நீவி
மெல்லெனத் தழீஇயினே னாக வென்மக
ணன்ன ராகத் திடைமுலை வியர்ப்பப்
பன்மாண் முயங்கினள் மன்னே யன்னோ
விறன்மிகு நெடுந்தகை பலபா ராட்ட
வறனிழ லசைஇ வான்புலந்து வருந்திய
ன் யா
மடமா னசாவினந் திரங்குமரஞ் சுவைக்குங்
காடுடன் கழித லறியிற் றந்தை
ம
யல்குபத மிகுத்த கடியுடை வியனகர்ச்
செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போலக்
கோதை யாயமொ டோரை தழீஇத்
தோடமை
தொடையமை யரிச்சிலம் பொலிப்பவவ
ளாடுவழி யாடுவழி யகலேன் மன்னே.

என்-து, உடன்போயின தலைமகளை நினைந்துச் செவிலித்தாய் மனையின்கண் வருந்தியது.

~~வண்ணப்புறக் கல்லாடனார்~~, வண்ணப்புறக் கந்தரத்தனார். ௪௯.

க.— களிற்றியானைநிரை.

௫௦ கடல்பா டவிந்து தோணி நீங்கி [அகநா-லா-404]
நெடுநீ ரிருங்கழிக் கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினு
மாணிழை நெடுந்தேர் பாணி நிற்பப்
பகலும் நம்வயி னகலா னாகிப்
பயின்றுவரு மன்னே பனிநீர்ச் சேர்ப்பன்
இனியே, மணப்பருங் காமந் தணப்ப நீந்தி
வாரா தோர்நமக் கியாஅ ரென்னது
மல்லன் மூதூர் மறையினை சென்று
சொல்லி னெவனோ பாண வெல்லி
மனைசேர் பெண்ணை மடிவா யன்றில்
துணையொன்று பிரியினுந் துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொண்டு கரக்கு
மொண்ணுத லரிவையா னென்செய்கோ வெனவே.

என்-து, தோழி பாணற்குச் சொல்லியது.

கருவூர் பூதஞ்சாத்தனார். ௫௦

க.—களிற்றியானைநிரை.

ஆள்வழக் கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தாள் யாஅத்துப்
போழ்வளி முழங்கும் புல்லிலை யுயர்சினை
முடைநசை யிருக்கைப் பெடைமுக நோக்கி
ஊன்பதித் தன்ன வெருவரு செஞ்செவி
யெருவைச் சேவல் கரிபுசிறை தீய
வேனி னீடிய வேயுயர் நனந்தலை
நீயுழந் தெய்துஞ் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோள்வயிற்
பிரியப் புணர்வ தாயிற் பிரியா
தேந்துமுலை முற்றம் வீங்கப் பல்லூழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ நாளு
மனைமுதல் வினையொடு முவப்ப
நினைமா ணெஞ்ச நீங்குதன் மறந்தே.

எ-து, பொருள்வயிற்பிரிவு கடைக்கூட்டிய
நெஞ்சிற்கு தலைமகன் சொல்லியது.

பெருந்தேவனார். (௫௧)

வலந்த வள்ளி மரனோங்கு சாரற் [அக-௫௨-273.]
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய ~~குறவர்~~ மகளிர்
இன்னா இசைய பூசல் பயிற்றலின்
௫. ஏக லடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி யாகுமஃ தெனத்தம்
மலைகெழு சீறூர் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாடன்
நெஞ்சமர் வியன்மார் புடைத்தென அன்னைக்
௧௦. கறிவிப் பேங்கொ லறியலெங் கொல்லென
இருபாற் பட்ட சூழ்ச்சி யொருபாற்
சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை
இன்னுயிர் கழிவ தாயினு நின்மகள்
ஆய்மலர் உண்கட் பசலை
௧௫. காம நோயெனச் செப்பா தீமே.

எ—து, தலைமகள் வேறுபட்டமையறிந்து செவிலித்தாய்க்குத் தோழியறத்தொடுநிற்குமெனத் தலைமகள் சொல்லியது.

நொச்சிநியமங் கிழார். ௫௨.

எ0 கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாற் கமழுஞ் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்க ணவ்வலைப் பயம்பா ராட்டிக்
கொழுங்க ணயிரை பகுக்குந் துறைவ
னம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
யலர்வாய்ப் பெண்டி ரம்ப லாக்கப்
பலராங் கறிந்தனர் மன்னே யினியே
வதுவை கூடிய பின்றைப் புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்குங்
கானலம் பெருந்துறைக் கவினி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கா னெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி — கவுரியர் கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராம னருமறைக் கவித்த — [illegible]
பல்வீ ழாலம் போல
வொலியவிந் தன்றிவ் வழுங்க லூரே.

என்-து, தலைமகன் வரைவுமலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார். எ0

[அகா-பொ-உ௬௬]

எக நிறைந்தோர்த் தேரு நெஞ்சமொடு குறைந்தோர்
பயனின் மையிற் பற்றுவிட் டொரீஇ
நயனின் மாக்கள் போல வண்டினஞ்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர
௫. மையின் மானின மருளப் பையென
வெந்துறு பொன்னி னந்தி பூப்ப
ஐயறி வகற்றுங் கையறு படரோ
டகலிரு வானம் அம்மஞ் சீனப்
பகலாற்றுப் படுத்த பழங்கண் மாலை
௧0. காதலர்ப் பிரிந்த புலம்பி னோதக
ஆரஞ ருறுந ரருநிறஞ் சுட்டிக்
கூரெஃ கெறிஞரி னலைத்த லானா
தெள்ளற வியற்றிய நிழல்காண் மண்டிலத்
துள்ளூ தாவியிற் பைப்பய நுணுகி ?
௧௫. மதுகை மாய்தல் வேண்டும் பெரிதழிந்
திதுகொல் வாழி தோழி யென்னுயிர்
விலங்குவெங் கடுவளி யெடுப்பத்
துலங்குமரப் புள்ளிற் றுறக்கும் பொழுதே.

எ-து, பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றாளாய தலைமகட்குத் தோழிசொல்லியது.

அந்தி இளங்கீரன். எக.
பொரு

எ௨. இருள்கிழிப் பதுபோல் மின்னி வானந் [தொ-பொ-285]
துளிதலைக் கொண்ட நளிபெய னடுநாண்
மின்மினி மொய்த்த முரவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டும் பெருங்கை யேற்றை
யிரும்புசெய் கொல்லெனத் தோன்று மாங்க
வாறே யருமர பினவே யாறே
சுட்டுநர்ப் பனிக்குஞ் சுழியுடை முடுக்கர்
களிறுமாய் நீத்தங் கல்பொரு திரங்க
வஞ்சுவர்த் தமிய மென்றோ ணெஞ்சமர்க்
தாழ்கழை நரலு மணங்குடைக் கவாஅ
னீர்போர்ப் பிணவின் வயவுப்பசி களைஇயர்
யிருங்களி றட்ட பெருஞ்சின வுழுவை
நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த
வாய்மணி விளக்கிற் புலாலை யீர்க்கும்
வாணடர்ந் தன்ன வழக்கருங் கவலை
யுள்ளுந ருட்குங் கல்லதர்ச் சிறுநெறி
யருளுபுரி நெஞ்சமொ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனு மல்லன் றந்த
நீதவ றுடையையு மல்லை நின்வயின்

னை வரும்படர் செய்த

யானே தோழி தவறுடையேனே.

என்-து, தலைமகன் இரவுக்குறிக்கட் சிறைப் புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்

~~எருமைவெளியனார்~~

மகனார் கடலனார். ௭௨

எ௩ பின்னொடு முடித்த மண்ணா முச்சி
நெய்கனி நெருவீ ழகப்படத் தைஇ
வெருகிரு ணோக்கி யன்ன கதிர்விடு
மொருகாழ் முத்த மிடைமுலை விளங்க
வணங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
நின்னோய்த் தலையையு மல்லை தெய்ய
வென்றெ குவல்கொ லளியன் றானென
வெண்ணழி மரங்கு நின்றோ டியாறு
மழவன் றெண்க வேதல் கோட்டு
யிருவே நம்படர் தீர வருவது
காணிய வம்மோ காதலந் தோழி
கொடிமிணங் கரில விருள்கோ ணாக
மடிபதம் பார்க்கும் வயமான் றுப்பி
னேனற் சிறுதினைச் சேணோன் கையதைப்
படுக்கை யமைந்த கனல்வாய்க் கொள்ளி
விடுபொறிச் சுடரின் மின்னி யவர்
சென்ற தேஎத்து நின்றதான் மழையே.

எ—து, தலைமகன் பொருள்வயிற் பிரிகின்றான் பருவங்குறித்துச் சென்றுப் பருவங்கண்டு அழிந்த தலைமகட்கு தோழி சொல்லியது. எருமைவெளியனார். எ௩

௭௪ வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து
போர்வ லிளையர் தாள்வலம் வாழ்த்தத்
தண்பெயல் பொழிந்த பைதறு காலைக்
குருதி யுருவி னொண்செம் மூதாய் இந்திரகோபம்
பெருவழி மருங்கிற் சிறுபல் வரிப்பப்
பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ
வெண்களா் ரரிமண ~~ன~~ னன்பல தாஅய்
வண்டுபோ தவிழ்க்குந் தண்கமழ் புறவிற்
கருங்கோட் டிரலைக் காமர் மடப்பிணை
மருண்டமா னோக்கங் காண்டொறு நின்னினைந்து
திண்டேர் வலவ கடவெனக் கடைஇ
யின்றே வருவர் வென்றிகம் பனியென
வன்புறை யின்சொ னன்பல பயிற்றும்
நின்வலித் தமைகுவென் மன்னே யல்கற்
புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்கோற்
கல்லாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலை.

எ-து, தலைமகன் பிரிவின்கண் வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

மதுரைக் கவுணியர் முத்தனார். — ௭௪.

அருளன் றாக வாள்வினை யாடவர்
பொருளென வலித்த பொருளில் காட்சியின்
மைந்துமலி யுள்ளமொடு துஞ்சல் செல்லாது
தெறிசினந் தவழ்ந்த விருங்கடற் றடைமுதற்
கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை
யடுபுலி முன்பிற் றொடுகழன் மறவர்
தொன்றியல் சிறுகுடி மன்றுநிழற் படுக்கு
மண்ணா நெடுவரை யாமரப் புலர்ந்த
கன்னெறிப் படாஅ ராயி னன்றுமற்
செயிர்தீர் கொள்கைச் சின்மொழித் துவர்வா
யவிர்தொடி முன்கை யாயிழை மகளி
ரார்ந் தாங்கிய வலர்முலை யாகத்
தாராக் காதலொடு தாரிடைக் குழையாது
சென்றுபடு விறற்கவி னுள்ளி யென்று
மிரங்குந ரல்லது பெயர்த்தந் தியாவருந்
தருநரு முளரோ விவ்வுலகத் தானென
மாரி யீங்கை மாத்தளி ரன்ன
வம்மா மேனி யைதமை யசுப்பித்
பல்காசு நிரைத்த கோடேந் தல்குன்

மெல்லியற் குறுமகள் புலந்துபல கூறி
யாணு நோயை யாக வவரோ
பிரியச் சூழ்தலு முண்டோ
வரிது பெறு சிறப்பி னின்வயி னானே.

எ-து, பொருள்வயிற் பிரியவென நெஞ்சுபட்ட
தலைமகட்குப் பிரியானெனத் தோழிசொல்லியது.

மதுரைப் பேராத்தனார். ௭௫

[தொ-பொ-398]

௭௬ மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத்
தண்டுறை யூரனெஞ் சேரி வந்தென
இன்கடுங் கள்ளி னஃதை களிற்றொடு
நன்கல னீயு நாண்மகி ழிருக்கை
அவைபுகு பொருநர் பறையி னானாது
கழறுப வென்பவவன் பெண்டி ரந்தில்
கச்சினன் கழலினன் றேந்தார் மார்பினன்
வகையமை பொலிந்த வனப்பமை தெரியற்
சுரியலம் பொருநனைக் காணீ ரோவென
வாதி மந்தி பேதுற் றினையச்
சிறைபாய்ந் துரைஇச் செங்குணக் கொழுகு
மந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே.

எ-து, தலைமகனை நயப்பரத்தைக் கொண்டானென்று கழறக் கேட்ட பரத்தை தலைமகட்குப் பாங்காயினோர் கேட்பச் சொல்லியது.

௭௬.

பரணர்.

௭௭. நன்னுதல் பசப்பவு மாள்வினை தரீஇயர்
துன்னருங் கானந் துன்னுத னன்றெனப்
பின்னின்று விடுத்தி யாயி னொன்றாஉந்
சூழ்ந்திசின் வாழிய நெஞ்சே வெய்துற
இடியுமிழ் வான நீங்கி யாங்கணுங்
குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்
கயிறுபிணிக் குழிசி யோலை கொண்மார்
பொறிகண் டழிக்கு மாவண மாக்களி
னுயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுகணாளர்த் தழீஇத் தெறுவரச்
செஞ்செவி யெருவை யஞ்சுவர விகுக்குங்
கல்லதர்க் கவலை போகிற் சீறூர்ப்
புல்லரை யித்திப் புகர்படு நீழ
லெல்வளி யலைக்கு மிருள்கூர் மாலை
வானவன் மறவன் வணங்குவிற் றடக்கை
யானா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
பொருந்தா மன்ன ரருஞ்சமத் துயர்த்த
திருந்திலை யெஃகம் போல
வருந்துயர் தருமிவள் பனிவார் கண்ணே.

எ—து, தலைமகன் பிரியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது. என.

மருதனிளநாகன்.

௭௮. நனந்தலைக் கானத் தாளி யஞ்சி
யினந்தலைத் தருஉ மெறுழ்கிளர் முன்பின்
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்த
லிரும்பிணர்த் தடக்கையி னெடுமரத் தூங்கிக்
கடுஞ்சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரற்
றேம்பிழி நறவிற் குறவர் முன்றில்
முந்தூ ழாய்மல ருதிரக் காந்தள்
னீடிதழ் நெடுந்துடுப் பொசியத் தண்ணென
வாடை தூக்கும் வருபனி யற்சிரந்
தம்மிலம் புலம்பத் தம்பிரிந் தமிய
றெண்ணுவர்கொ லளியர் தாமென
வெம்விட் டகன்ற வின்னாட் சிறந்து
முன்னிய மறிதியோ வோங்குமலை நாட
உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை +
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று கபிலன
செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தா ளாம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையாது
தாளிடூஉக் கடந்து வாளம ருழக்கி
யேந்துகோட் டியானை வேந்தரோட் டிய பாரி
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி

யாம்பெரும் பைஞ்சுனை பூத்த
தேங்கமழ் நறுமலர் நாறுநுதலே.

எ-து, களவுக் காலத்துப் பிரிந்து வந்த
தலைமகற்குத் தோழி சொல்லியது.

மதுரை நக்கீரனார். ௭௮.

௭௯ கோட்பத னமைத்த கருங்கை யாடவர்
கனையெரி நைப்ப நீடி விசை யடர்த்து
கல்லுடைத் தியற்றிய வல்லுவர்ப் பதுக்கைத்
பாருடை மருங்கி னாறன் மண்டி
வன்புலந் துமியப் போகிக் கொங்கர்
படுமணி யாயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லுஞ்
சேதா வெடுத்த செந்நிலக் குரூஉத் துகள்
வகலிரு விசும்பி னான்றிக் கோன்று
நனந்தலை யழுவ நம்மொடு துணியா (ப்ப)
வல்லாங்கு வருது மென்னு நல்குவர்
வருந்தினை வாழியெ னெஞ்சே யிருஞ்சிறை
வளைவாய்ப் பருந்தின் வன்கட் பெடை
யாடுதொறு கனைய மவ்வாய்க் கடுந்துடிக்
கொடுவில் லெயினர் கோட்சுரம் படர
நெடுவிளி பயிற்று நிரம்பா நீளிடைக்
கல்பிறங் கத்தம் போகி
நில்லாப் பொருட்பிணி பிரிந்திசி னோயே.

எ-து, பொருள்வயிற்பிரிந்த தலைமகன் இடைச்
சுரத்துத் தன் னெஞ்சிற்குச்சொல்லியது. ௭௯.

குடவாயிற் கீரத்தனார்.

கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கு
மிருங்கழி யிட்டுச்சுரம் நீந்தி யிரவின்
வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப
நினக்கெவ னரியமோ யாமே யெந்தை
புணர்திரைப் பரப்பகந் துழைஇத் தந்த
பன்மீ னுணங்கல் படுபுள் ளோப்ப
முண்டகங் கலித்த முதுநீ ரடைகரை
யொண்பன் மலர கவட்டிலை யடும்பின்
செங்கேழ் மென்கொடி யாழி யறுப்ப
இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ
மின்னிலைப் பொலிந்த விளங்கிணர் வீழ்பெயற்
றன்னாயம் பைந்தா துறைக்கும்
புன்னையங் கானற் பகல்வந் தீமே.

எ-து, இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

மருதங்கிழான் மகனார் பெருங்கண்ணனார். ௮0

நாவுலவா வெருந்த கோள்வ லாலிய
மோங்குசினை யிருப்பைத் தீம்பழ முனையிற்
புல்லரைப் புற்றின் பல்கிளைச் சிதலை
யொருங்குமுயன் றெடுத்த நனிவாய் நெடுங்கோ
டிரும்புற்று குரும்பி விடக்கிரை தேரு
மண்பக வதைந்த வாங்குகட் கண்பொரக்
கதிர்தெறக் கவிழ்ந்த வுலறுதலை நோன்சினை
நெறியயல் யாஅ மேலிப் புலம்புகொள
வெறிபறைக் கியவு மெண்டாழ் நிலவிடை
வெம்முனை யருஞ்சுர நீந்திச் சிறந்த
செம்ம லுள்ளந் துரத்தலிற் கருத்தோ
ரொலிய வே வழுவங் கலியபடக் கடக்கு
மாவண் கடலன் விளங்கி லன்னவெம் கடலன் விளங்கில்
மையெழி லுண்கண் கலுழ
வைய சேறிரோ வகன்றுசெய் பொருட்கே.

எ-து, பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி தலைமகளது குறிப்பறிந்து வந்து சொல்லியது.

ஆலம் பேரி சாத்தன். அக.

[தொ-பொ-220]

அஉ. ஆடமைக் குயின்ற வவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் றுதைகுர லாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
வின்ப லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
விழவுக்கள விறலியிற் றோன்று நாட
னுருவ வல்விற் பற்றி யம்பு தெரிந்து
செருச்செய் யானை செல்நெறி வினாஅய்ப்
புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவருள்
ளாரிருட் கங்குல் அணையொடு பொருந்தி
யோர்யா னாகுவ தெவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே.

எ-து, தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

கபிலர். அஉ

[தொ-பொ-119.]

௮௩ வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ் புதுவீச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடிக்
குறுந்தொடை மடப்பிடி கானத் தலறக்
களிற்றுக்கன் றொழித்த வுவகையர் கலிசிறந்து
கருங்கால் யாஅத்துக் கொடுங்கொம்பு பிளந்து
பெரும்பொளி வெண்ணா ரழுங்குபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கு நியமமூதூர்
நறவுநொடை நெல்லிற் புதவுமுதற் பிணிக்குங்
கல்லா விளையர் பெருமகன் புல்லி
வியன்றலை நன்னாட்டு வேங்கடங் கழியினுஞ்
சேய ரென்னா தன்புமிகக் கடைஇ
யெய்தவந் தனவாற் றாமே நெய்தற்
கூம்புவிடு நிகர்மல ரன்ன ஒளி.
வேந்தெழின் மழைக்கணெங் காதலி குணனே.

என்பது, தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

கல்லாடன். ௮௩.

புல்லி வேங்கடம்

க.— களிற்றியானை நிரை.

[தொ-பொ-46. 49. 73. 77.]

அச. மலைமிசைக் குலைஇய வுருகெழு திருவிற்
பணைமுழங் கெழிலி பௌவம் வாங்கித்
தாழ்பெயற் கெதிரிய வலனேர்பு வளைஇ
மாதிரம் புதையப் பொழிதலிற் காண்வர
இருநிலங் கவினிய வேமுறு காலை
நெருப்பி னன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கட் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாண்மலர் உதிரும்
புறவடைந் திருந்த வருமுனை யியவிற்
சீறூ ரோளே நன்னுதல் யாமே
எரிபுரை பன்மலர் பிறழ வாங்கி
அரிஞ ரியாத்த வலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ளார் வினைஞர் களந்தொறு மறுகுந்
தண்ணடை தழீஇய கொடிநுடங் காரெயி
லருந்திறை கொடுப்பவுங் கொள்ளான் சினஞ்சிறந்து
வினைவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே.

எ-து, தலைமகன் பாசறைக்கண் இருந்து சொல்லியது.

மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதன். அச

௮௫ நின்னுதல் பசப்பவும் பெருந்தோ ணெகிழவு
முண்ணா வுயக்கமொ டுயிர்செலச் சாஅ
யின்ன மாகவு மிங்குநத் துறந்தோ
ரறவ ரல்ல ரவரெனப் பலபுலந்
தாழல் வாழி தோழி சாரல்
லீன்றுநா ளுலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்றா மூங்கின் முளைதரு பூட்டும்
வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை
நன்னாட் பூத்த நாகிள வேங்கை
நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தி னாறுசினை யிருந்து
துணைப்பயிர்ந் தகவுந் துணைதரு தண்கார்
வருதும் யாமெனத் தேற்றிய
பருவங் காணிது பாயின்று மழையே.

எ—து, தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட
தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

இப்பாட்டு எதிர்காலம் நோக்கியது.

காட்டூர்கிழார் மகனார் கண்ணனார். ௮௫.

திரையன் வேங்கடம்

க.—களிற்றியானை நிரை.

[தொ-பொ-345]

அசு. உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவைப்
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிரு ளகன்ற கவின்பெறு காலைக்
கோள்கா ணீங்கிய கொடுவெண் டிங்கட்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவு முறைமுறை தரீஇப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த வீரித ழலரிப்
பல்லிருங் கதுப்பி னெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகென மாத (பாடம்: எனத்தமர்)
ஓரிற் கூடிய வுடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளஇ கோடிக் கலிங்கத்

தொடங்கினள் கிடந்த தோள்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சின ளுயிர்த்த காலை யாழநின்
௨௫. நெஞ்சம் படர்ந்த தெஞ்சா துரையென
இன்னகை யிருக்கைப் பின்யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகமலி யுவகைய ளாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே மாவின்
௩௰ மடங்கொள் மதைஇய நோக்கி
னொடுங்கீ ரோதி மாஅ யோளே.

என்-து, வாயின் மறுத்த தோழிக்குத்
தலைமகன் சொல்லியது.

நல்லாவூர்க் கிழார் அகம்.

க.— களிற்றியானைநிரை.

அஎ. தீந்தயிர் கடைந்த திரள்கான் மத்தங்
கன்றுவாய் சுவைப்ப முன்றிற் றூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை
நல்கூர் சீறூ ரெல்லித் தங்கிக்
குடுமி நெற்றி நெடுமாச் சேவல்
தலைக்குரல் விடியற் போகி முனாஅது
கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பி
னெழுந்த தண்ணுமை யிடங்கட் பாணி
யருஞ்சுரஞ் செல்வோர் நெஞ்சந் துண்ணெனக்
குன்றுசேர் கவலை யிசைக்கு மத்த
நனிநீ டுழந்தனை மன்னே யதனா
லுவவினி வாழிய நெஞ்சே மையற
வைகுசுடர் விளங்கும் வான்றோய் வியனகர்ச்
சுணங்கணி வனமுலை பலபா ராட்டத்
தாழிருங் கூந்தலெங் காதலி
நீளமை வனப்பிற் றெருமா ரணைத்தே.

எ-து, வினைமுற்றி மீண்ட தலைமகன் தன்னெஞ்சிற் ~~தேர்ப்பாகற்~~குச் சொல்லியது.

மதுரைப் பேராலவாயர். அஎ.

௮௮. முதைச் சுவற் கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குர லுணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லி பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிற நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்க நோக்கி வந்துநம்
நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே குன்றத்
திரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுண்மலி மிழியுங் காமர் கடாஅ
மிருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரளை யசுண மோர்க்குங்
காம்பம லிறும்பிற் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிர லுளியங் கெண்டும்
வடுவாழ் புற்றின் வழக்கரு நெறியே.

எ — து, இரவுக்குறிவந்த தலைமகன் சிறைப்
புறத்தானாகத் தோழி சொல்லியது.

ஈழத்துப் பூதன் தேவனார். ௮௮.

அகூ தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்
உறுபெயல் வறந்த வோடுதேர் நனந்தலை
யுருத்தெழு குரல குடுமிச் சேவல்
புல்சாய் விடரகம் புலம்ப வரைய
கல்லெறி யிசையி னிரட்டு மாங்கட்
சில்வீடு கறங்குஞ் சிறியிலை வேலத்
தூழுறு விளைநெற் றுதிரக் காழியர்
கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழியக்
களரி பரந்த கன்னடு மருங்கின்
விளரூன் றின்ற வீங்குசிலை மறவர்
மைபடு திண்டோண் மலிர வாட்டிப்
பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவ ரருந்தலை துமிந்த
படுபுலால் கமழு ஞாட்பிற் றுடியிகுத்
தருங்கலந் தெறுத்த பெரும்புகல் வலத்தர் 154
வில்கெழு குறும்பிற் கோண்முறை பகுக்குங்
கொல்லை யிரும்புன நெடிய வென்னாது
மெல்லென் சேவடி மெலிய வேக
வல்லினள் கொல்லோ தானே தேம்பெய்
தளவுறு தீம்பா லலைப்பவு முண்ணா
திடுமணற் பந்தரு ளியலு
நெடுமென் பணைத்தோண் மாஅ யோளே.

அகநானூறு.

ள-து, மகட்போக்கிய செவிலி சொல்லியது.

மதுரைக் காஞ்சிப்புலவன்.

ஞo மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி [தொ-பொ-315]

யிளையோ ராடும் வரிமனை சிதைக்குந்

தளையவிழ் தாழைக் கானலம் பெருந்துறைத்

சில்செவித் தகிய புணர்ச்சி யலவொடு

செறி
வில்வயற் சிறைத்தமை யறியாய் பன்னாள்

வருமுலை வருத்தா வம்பகட்டு மார்பிற்

றெருமர லல்லமொடு வருந்துப நின்வயி

னிங்குப சென்றியான் யாங்ஙன மொழிகோ

வருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது (செல்லூர் [illegible] கடலுளது)

பெருங்கடன் முழக்கிற் றாகி யாணர்

இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்

கருங்கட் கோசர் நியம மாயினு (கோசர் நியமம்)

முறுமெனக் கொள்வ ரல்லர்

நறுநுத லரிவை பாசிழை விலையே.

எ-து, பகற்குறி வந்து நீங்குந் த
லைமகனைத் தோழி எதிர்ப்பட்டு இற்செறிவு அறிவுறீஇயது.

மதுரை மருத னிளநாகன்: ஞo

க.— களிற்றியானைநிரை.

பிழை

௯௧ விளங்குபகை கதுவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்
அருவி யான்ற பெருவற மருங்கிற்
றெண்சுனை து[illegible]ழகி நீர்ப்பயங் காணாது
பாசி தின்ற பைங்கண் யானை
யோய்பசிப் பிடியோ டொருதிற நெடுங்க
வெய்கண் துடைந்த வெயிலவிர் நனந்தலை — வழிபட்ட இடம்.
தடமருப் பெருமை தாமரா முன்னையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியுங்
குடநாடு பெறினுந் தவிரலர் குடநாடு
மடமா னோக்கினின் மாமலை மறந்தே.

என்-து, பிரிவிடை மெலிந்த தலைமகளைத்
தோழி வற்புறுத்தியது.

மாமூலர். ௯௧.

கூஉ நெடுமலை யடுக்கங் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குற்
குஞ்சர நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்
செங்க ணிரும்புலி குழுமுஞ் சாரல் குழூஉம்
ரு வாரல் வாழி யைய நேரிறை
நெடுமென் பணைத்தோ ளிவளுநம் யானுங்
காவல் கண்ணினந் தினையே நாளை
மந்திய மறியா மரம்பயி லிறும்பி
னொண்செங் காந்த ளவிழ்ந்த வாங்கட்
க0. டண்ப லருவித் தாழ்நீ ரொருசிறை
புழுச் சிவந் தெறிந்த மரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை
யருண்மென் கூந்த லேமுறு மயிலே.

எ-து, இரவுக்குறிச்சென்ற தலைமகனைக் கண்ணுற்று நீங்குந் தலைமகனைப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டாற் றோழி வரைவுகடாயது.

மதுரைப் பாலாசிரியர் நற்றாமன். கூஉ.

பொ- 51, 101, 362, 514, 750

கேள்கே டூன்றவுங் கிளைஞ ராரவுங்
கேளல் கேளிர் கெழீஇயின ரொழுகவு
மாள்வினைக் கெதிரிய ஆக்கமொடு புகல்சிறந்
தாரங் கண்ணி யடுபோர்ச் சோழ சோழர் உறந்தை
ரறங்கெழு நல்லவை யுறந்தை யன்ன
பெறலரு நன்கல மெய்திய நாடுஞ்
செயலருஞ் செய்வினை முற்றின மாயி
னரண்பல கடந்த முரண்கொ டானை
வாடா வேம்பின் வழுதி கூட வழுதிகூட
னாளங் காடி நாறு நறுநுத
னீளிருங் கூந்தன் மாஅ யோளொடு
வரைகுயின் றன்ன வான்றோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து
நலங்கே ழாகம் பூண்வடுப் பொறிப்ப பொ (750)
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே வரிநுத
லயந்திகழ் பிணிக்கும் வாய்புகு கடாத்து
மீளி மொய்ம்பொடு நிலனெறி யாக் குயெகி
யான்கோட் மையீழ் வஞ்சவரு கடக்கைக்

28

கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை

கருவூர் திருவமர் வியனகர்க் கருவூர் முன்றுறைத்

தெண்ணீ ருயர்கரைக் குவைஇய

ஆன் பொருநை தண்ணான் பொருநை மணலினும் பலவே.

எ-து, வினைமுற்றி மீளுந் தலைமகன் தன்

நெஞ்சிற்குச் சொல்லியது.

கணக்காயனார் மகனார் நக்கீரர். ௯௩

செம்புடைச் சிறுமையப் பாங்கர்ப் பம்பிய
கவையிலை முசுண்டை வான்பூங் குழைய
வான்பூத் தன்ன பானாட் கங்குல்
மறிக்குமேவர்க் கொடுஞ்ச பறிப்புற விடையன் தோலப்பாய்.
நன்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணிய
ஊதுபடு கொள்ளி யங்கைக் காயக்
வேயத் தீப டு கொள்ளியங் கைகாய்த
குயாரி புலம்புங் கூறிரு ளொதுவினி
இயக்கட் பண்ணிப் பெருநிரை கூடிய
முல்லைப் புனங் சேர்வா நினைத்திருங் காதுங்
கருங் கொட் டோசையொடு டொருங்குவேர் நிறைக்கும்
வன்புலக் காட்டுநாட் டதுவே யன்புகலந்
தார்வஞ் சிறந்த சாய
இரும்பல் கூந்தற் குறுந்தொழு யூரே.

எ-து, வினைமுற்றி மீளுந் தலைமகன்
தேர்ப்பாகற்குச் சொல்லியது.

நன்பலூர்ச் சிறுமேதாவியார். ௯௪.

௯௫. பைபயப் பசந்தன்று நுதலுஞ் சாஅய் தொல், பொ., பக்-79.

ஐதே கின்றென் றுயிர்புறு மேனியும்

பலரு மறியத் திகழ்தரு மவல

முயிர்கொண்டு கழியி னல்லதை நினையின்

னெவனோ வாழி தோழி பொறிகட்

பொருட்டலை யிருப்பைக் குவிகுலைக் கழன்ற

வாலி யொப்பின் வாம்புடைத் திரள்வீ

யாறுசெல் வம்பலர் நீளிடை யழுங்க

வீனலெண்கி னிருங்கிளை கவருஞ்

சுரம்பல கடந்தோர்க் கிரங்குப வென்னார்

கௌவை மேவல ராகி யிவ்வூர்

நிரையப் பெண்டி ரின்னா கூறுவம்

புரைய வல்லவென் மகட்கெனப் பரைஇ

நிரம்புணர்த் தாற்றிய கொள்கை

யன்னை முன்னர்ய் மாவென் னிறுத்த படலே.

எ—து, போக்குடன்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தேரோடகத் துவாநாத்தனார். ௯௫

௯௬ நிறவுண் மண்ணை துடக்கலி னிறவுக் கலித்துப்
பூட்டுறு வில்லிற் கூட்டுமுதற் றெறிக்கும்
பழனப் பொய்கை யடைகரைப் பிரம்பி
னரவா யன்ன வம்பழ நெடுங் கொடி
யருவியாம்/பலக்கடை துடக்கி ~~யசைவரல்~~
யசைவரல் வாடை தூக்கலி னூதுலை
~~வாடை தூக்கலி னூதுலைக் குருகின்~~
விசைவாங்கு தோலின் வீங்குபு ஞெகிழுங்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர
வொண்டொடி யாயத் துள்ளுநீ நயந்து
கொண்டனை யென்பவோர் குறுமக ளதுவே
செம்பொற் சிலம்பிற் செறிந்த குறங்கி
னங்கலுழ் மாமை யஃதை தந்தை அடு ஞாதர்ச் சோழர்
யண்ணல் யானை யடுபோர்ச் சோழர்
வெண்ணெல் வைப்பிற் பருவூர்ப் பறந்தலை பருவூர்.
யிருபெரு வேந்தரும் பொருதுகளத் தொழிய
வொளிறுவா ணல்லமர்க் கடந்த ஞான்றைக்
களிறுகவர் கம்பலை போல
வலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

என்பது, தோழி வாயின் மறுத்தது.

மருதம்பாடிய இளங்கடுங்கோ. ௯௬

௯௭. கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை தொல்.பொ. பக்-௨௰
வறனுற லங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
யிரவுக் குறும் பலற நூறி நிரைபகுத்
திருங்கன் முடுக்கர்த் திரீஇக் கெண்டுங்
கொலைவி லாடவர் போலப் பலவுடன்
பெருந்தலை யெருவையுடன் பருந்துவந் திறுக்கு
மருஞ்சுர மிறந்த கொடியோர்க் கல்கலு
மிருங்கழை யிரும்ப னைய்ந்துகொண் டயர்த
அணங்குகட் சிறுசொல் வணங்கிறை மகளிரொ
டகவுநர்ப் புரந்த வன்மைக் கழற்றொடி
நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான் நன்னன் வேண்மான் வயலூர்
வயலை வேலி வியலூ ரன்னநின்
னலர்முலை யாகம் புலம்பப் பலபுலந்
தாழ லென்றி தோழி யாழவென்
கண்பனி நிறுத்த லெளிதோ குரவமலர்ந்
தற்சிரா நீங்கிய வரும்பத வேனி
லறலவிர் வார்மண லகலியாற் றடைகரைத்
துறையணி மருதொ டிகல்கொள வோங்கிக்
கலிழ்கவி னணிந்த விருஞ்சினை மாஅத்

தளிர்த்தலை புதுப்பூ கிளைத்த பொங்கர்ப்
புகைபுரை அம்மஞ் ஞாற
துகர்துயி லகவுங் குரல்கேட் போர்க்கே.

எ-து, வற்புறுத்துந் தோழிக்குத்
தலைமகள் சொல்லியது.

மாமூலர். ௯௭.

௧. — களிற்றியானைநிரை.

பணிவரை நிவந்த பயங்கெழு கவாஅன் தொல். பொருள். பக் - 230
றுனியல் கொள்கையொ டவர்நமக் குவந்த
வினிய வுள்ள மின்னா வாகி
முனிதக வந்த நல்க லெவ்வஞ்
சூருறு வெந்நோய் மார்புறத் தணிக
லதிந்தன ளல்ல ளன்னை வார்கோத்
செறிந்திலங் கெல்வளை நெகிழ்ந்து நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புளர் பிரீஇ
முருக னாரணங் கென்றலி னதுசெத்
தோவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன பலராய் மாண்கவின்
பண்டையிற் சிறக்கவென் மகட்கெனப் பரைஇக்
கூடுகொ ளின்னியங் கறங்கக் களனிழைத்
தாடணி யயர்ந்த வகன்பெரும் பந்தர்
வெண்போழ்க் கடம்பொடு சூடி யின்சீர்
ரைதமை பாணி யிரீஇக் கைபெயராச்
செல்வன் பெரும்பெய ரேத்தி வேலன்
வெறியயர் வியன்களம் பொற்ப வல்லோன்
பொறியமை பாவையிற் றூங்கல் வேண்டி
னென்றுங் கொல்லோ தோழி மயங்கிய

அகநானூறு.

மையற் பெண்டிர்க்கே நொவ்வ லாக
வாடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயி னிம்மை
யலரா காமையோ வரிதே யஃதான்
றறிவரு குயவி யல்லல்கண் டருளி
வெறிகமழ் நெடுவே ளல்குவ னெனினே
செறிதொடி யுற்ற செல்லல் பிறிதெனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யானுயிர் வாழ்த லதனினு மரிதே.

என்பது, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

வெறிபாடிய காமக்கண்ணியார். ௯௮.

௯௯ வாள்வரி வயமான் கோளுகி ரன்ன தொல்-பொ-பக்.75

செம்முகை யவிழ்ந்த முண்முதிர் முருக்கின்

வண்டு இதரார் செம்ம றூஉய் மதரெழின்

மாணிழை மகளிர் பூணுடை முலையின்

முகைபிணி யவிழ்ந்த கோங்கமொ டசைஇயணி

யதிரல் பரந்த வந்தண் பாதிரி

முதிர்வீ யஞ்சினை தாஅ யெதிர்வீ

மராஅ மலரொடு விராஅய்ப் பராஅய்

யணங்குடை நகரின் மணந்த பூவின்

நன்றே கான நயவரு மம்ம

கண்டிசின் வாழியோ குறுமக ணுந்தை

யடுகளம் பயந்த தொடிஇறை மருப்பிற்

பிடிமிடை களிற்றிற் றென்றூங்

குறுநெடுந் துணைய குன்றமு முடைத்தே.

எ-து, உடன்போகிய தலைமகட்குத் தலைமகன்

மெட்டிச் சொல்லியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ. ௯௯

அணையுற் றமைந்த வார நீவிப்
புனையப் பூண்ட கோதை மார்பினை
நல்லகம் வடுக்கொள முயங்கி நீவர்
எல்லினிற் பெயர்த லெனக்குமா ரினிதே
பெருங்கிளை முழக்கமொ டியக்கவிழ்ந் திருந்த
கொண்ட லிரவி னிருங்கடன் மடுத்த
கொழுமீன் கொள்பவ ரிருணீங் கொண்சுட
ரோடாப் பூட்கை வேந்தன் பாசறை
யாடியல் யானை யணிமுகத் திசைத்த
வோடை யொண்சுட ரொப்பத் தோன்றும்
பாடுநர்த் தடுத்த கைவண் கோமான்
புரியுடை நற்றேர்ப் பெரியன் விரிபுனற் பெரியன்
புன்னையங் கானற் (பொ)புறந்தை முன்றுறை (புறந்தை / புறையு / று)
வம்ப நாரை நவின் றொலித் தன்ன
வம்பல் வாய்த்த தெய்ய தண்புலர்
வைகுறு விடியற் போகிய வெருமை
நெய்தற் புதுமலர் மாந்தும்
கைதையம் படப்பையெம் மழுங்க லூரே.

என்பது, தோழி வரைவு கடாயது.

௪௦௦

உலோச்சனார்.

௱௧ அம்ம வாழி தோழி யிம்மை
நன்றுசெய் மருங்கிற் றீதி லென்னும்
தொன்றுபடு பழமொழி யின்றுபொய்த் தன்றுகொல்
கரிமருப் பெய்ப்பச் சுக்குபு சுரிந்த
சுவன்மாய் பித்தைச் செங்கண் மழவர்
வாய்ப்பகை கடியு மண்ணொடு கடுந்திறற்
றீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி
நுரைதெரி மத்தங் கொளீஇ நிரைப்புறத் மத்திகை
தடிபுதை தொடுதோல் பறைய வேகிக்
கடிபுலங் கவர்ந்த கன்றுடைக் கொள்ளைய
ரினந்தலை பெயர்க்கு நனந்தலைப் பெருங்காட்
டகலிரு விசும்பிற் கூடம் போலப்
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிற்
றுருப்பவிர் புளரிய சுழன்றுவரு கோடைப்
புன்கான் முருங்கை மீகழி பன்மலர்
தண்கா ராலியிற் றூவன வுதிரும்
பனிப்பெயன் மலையிறந் தோர்க்கு
முனிதக்கு பண்பியாஞ் செய்தன்றோ விலமே.

என்-து, பிரிவிடைவேறுபட்ட தலைமகள் தோழிக்குச்சொல்லியது.
தோழி தலைமகட்குச்சொல்லியதுமாம்.

௱௧.

மாமூலன்.

௱௨ உளைமான் துப்பி னோங்குதிணிப் பெரும்புனத்துக் தொ.-பொ.- 327
கழுதிற் கானவர் இழிமகிழ்ந்து வதிந்தென
வளைத்த சீந்தி வாரக விருங்கதுப்
பைதுவர லசைவளி யாத்தக்கைப் பெயரா
௫. ஒலியல் வார்மயி ருளரினுங் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றெய்யென
மரம்புகன் மழகளி றுறங்கு நாட
௰ ஊர மார்பி னரிமிகு நுரப்பத்,
தாரன் கண்ணிய னெஃகுடை வலத்தன்,
காவல ரறிதல் ஓம்பிப் பையென
வீழாக் கதவ மசையினன் புகுதந்
தியங்குபட ரகல முயங்கித் தோண்மணந்
௧௫ தின்சொ லளிப்பப் பெயர்ந்தனன் தோழி
யின்றவன் கொல்லோ கண்டிகு மற்றவ
னல்கா மையி னம்ப லாகி
யொருங்குவர லுலக்கும் பண்பி
னிருந்து பிழைதி யொண்ணுதற் பசப்பே.

எ-து, இரவுக்குறிக்கட் சிறைப்புறத்தானைத்
தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. ௱௨

மதுரைப் பாலாசிரியன் சேனங்கூத்தன்.

௱௩ நிழலறு நனந்தலை யெழாலேறு குறித்த ?
கதிர்த்த சென்னி நுணங்குசெந் நாவின்
விதிர்த்த போலு மந்நுண் பல்பொறிக்
காமர் சேவ லேமஞ் செப்ப தொல், பொ-789.
முளியரில் புலம்பப் போகி முனாஅது
முரம்படைந் திருந்த மூரி மன்றத்
தகர்பாழ்த் தல்கு மாசெழுஞ் சிறுகுடி
யுறையுநர் போகிய வோங்குநிலை வியன்மனை
யிறைநிழ லொருசிறை புலம்பயா வுயிர்க்கும்
வெம்முனை யருஞ்சுர நீந்தித் தம்வயி
னீண்டுவினை மருங்கின் மீண்டோர் மன்னென
நள்ளென் யாமத் துயவுத்துணை யாக
நம்மொடு பசலை தோன்றுக நம்மொடு
தானே சென்ற நலனு
நல்கார் கொல்லோநந் நயந்திசி னோரே.

எ-து, தலைமகன் பிரிவின்கண் தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.

காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார். ௱௩

௱௪ வேந்து வினை முடித்த காலைத் தேம்பாய்ந் தொல், பொரு. 432
தினவண் டார்க்குந் தண்ணறும் புறவின்
வென்வெ லிளைய ரின்புற வலவன்
வள்வலித் தூரி னல்லது முள்ளுறின்
முந்நீர் மண்டில மாதி யாற்றா
நன்னான்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்
வாங்குசினைப் பொலிய வேறிப் புதல
பூங்கொடி யவரைப் பொய்யத ளன்ன
வுள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய
புன்றலைச் சிறாரோ டுகளி மன்றுழைக்
கவையிலை யாரி னங்குழை கறிக்குஞ்
சீறூர் பலபிறக் கொழிய மாலை
யினிதுசெய் தனையா லெந்தை வாழிய
பனிவார் கண்ணள் பலபுலந் துறையு
மாய்தொடி யரிவை கூந்தற்
போதுகு ரணிய வேய்தந் தோயே.

எ-து, வினைமுற்றிவந்த தலைமகற்குத்
தோழி சொல்லியது.

மதுரை மருதனிளநாகன். ௱௪

அகலறை மலர்ந்த வரும்புமுதிர் வேங்கை
யொள்ளிலைத் தொடலை தைஇ மெல்லென
நல்வரை நாடன் தம்பா ராட்ட
யாங்குவல் லுநள்கொ றானே தேம்பெய்து
௫. மணிசெய் மண்டைத் தீம்பா லேந்தி
யீனாத் தாயர் மடுப்ப வுண்ணா
ணிழக்கயத் தன்ன நீணகர் வரைப்பி
னெம்முடைச் செல்வ முள்ளாள் பொய்ம்மருண்டு
பந்துபுடைப் பன்ன பாணிப் பல்லடிச்
௧௦ சில்பரிக் குதிரை வல்வே லெழினி
கெடலருந் துப்பின் விடுதொழி லமையார்
கனையெரி நடந்த கல்காய் கானத்து
வினைவ லம்பின் விழுத்தொடை மழவர்
தேம்பிழி நறவுதன் மகளின் முகின கடந்து
௧௫. வலங்குமென் கூழைய வெற்றினர் தரூஉ
முனைகெட விரைந்த வலனிற்
பகைதலை மணந்த பல்லதர்ச் செலவே.

என்பது, மகட்போக்கிய தாய் சொல்லியது.

௧௦௫.

தாயங்கண்ணன்.

௧௦௬. எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரியகைந் தன்ன பொங்குபல் சிறுமீன்
வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப்
பறைதபு முதுசிர லசைபுவந் திருக்குந்
துறைகே ழூரன் பெண்டென் கொடுமை
நம்மொடு புலக்கு மென்ப நாமது
செய்யா மாயினு முய்யா மையின்
செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவ
ணுலமர்ந்து வருக சென்மோ தோழி
வெளிறில் கற்பின் மண்டம ரடுதொறுங்
களிறுபெறு வல்லிப் பாண னெறியுந்
தண்ணுமைக் கண்ணி னலிகியர்தன் வயிறே.

எ-து, தலைமகன் தன்னைப் புறங்கூறி
னளாகக் கேட்டபரத்தை அவட்குப்
பாங்காயினோர் கேட்பச் சொல்லியது.

ஆலங்குடி வங்கன். ௧௦௬

௧0௭ நீசெல்வயரக் கேட்டொறும் பன்னினைந்து

~~பல நினைந் தன்பின் நெஞ்சத்து~~

அன்பி னெஞ்சத் தயாப்பொறை மெலிந்த

~~யாப்பொறை மெலிந்து~~

வென்னகத் திடும்பை களைமார் நின்னொடு

கருங்கல் வியலறைக் கிடப்பி வயிறுதின்

திரும்புலி துறந்த வெம்புமா றுணங்க

ணெறிசெல் வம்பலர் ருவந்தன ராங்க

ணொலிகழை நெல்லி னரிசியொ டொராஅங்

கானிலைப் பள்ளி யளைபெய் தட்ட

வானிண முருக்கிய வாரல்வெண் சோறு வழுத்தல்

புகரரைத் தேக்கி னகலிலை மாந்துங்

கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர் கதநாய்வடு

வல்லா ணருமுனை நீந்தி யல்லாந்

துருமனா வஞ்சு மொருகாற் பட்டந்

தின்று வெந்நத் திருக்கி முடங்கினர்

தொகுகளித் தொழிந்த வாறுடை தொன்பக

டங்குழை யிருப்பை யிறைவாய் வான்புழல்

புல்லுளைச் சிறுஅர் வில்லி னீக்கி

மழைகழந் தாட்டும் வளாயகச் சீறார்

மாலையின் றுணை யாகிக் காலைப்

பசுநனை நறுவீப் பரூஉப்பர லறைப்ப

அகநானூறு.

மணமனை கமழுங் கான மம்ம
அன்னையீ ரோதியென் றெழியும் வருமென
வருவான் வாழி தோழி யல்கல்
விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ யரவி
ணணங்குடை மணித்தலை பைவிரிப் பவைபொற்
காயா மென்சினை தோய நீடிப்
பஃறுடும் பெருத்த வலங்குகுலைக் காந்த
ளணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
கையாடு வட்டிற் றோன்றும்
மையாடு சென்னி மலைகிழ வோனே.

எ-து, தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

தங்கால் முட்கோவனார். - ௧௦௮.

109 பல்லிதழ் மென்மல ருண்க ணல்யாழ்
நரம்பிசைத் தன்ன வின்றீங் கிளவி
நலநல் கொருத்தி யிருந்த வூரே
கோடுழு களிற்றின் னெடுநிரை யீண்டிக்
கொடுகால் யாத்த நீடமைச் சோலை
விழைவெளி லாடுங் கழைவளர் நனந்தலை
வெண்ணுனை யம்பின் விடையிட வீழ்ந்தோர்
எண்ணுவரம் பறியா வுவலிடு பதுக்கைச்
சுரங்கெழு கவலை கோட்பாற் பட்டென
வழங்குநர் மடிந்த வத்த மிறந்தோர்
கைப்பொரு ளில்லை யாயினு மெய்க்கொண் 'கொள்ளும் பொருளிலர் கலை.
புன்றுயர் கொள்வாட் டசன்ற பரத்தீப் ?
பெருங்களிற்று மருப்பொடு வரியத ளிறுக்கு
மரனில் வேந்த ஞெரேம் தொல், மெய - உ. 116.
வரனுய குன்றம் பலவிலங் கினவே.

எ - து, இடைச்சுரத்துத் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

௧௦௮

கடுந்தொடைக் காவினர்.

௱க0 அன்னை யறியினு மறிக வலர்வா
யம்மென் சேரி கேட்பினுங் கேட்க
பிறிதொன் றின்மை யறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கிக் தொ, பொ - ய கக.
கடுஞ்சூ டருகுவ னினக்கே கானற்
றொடலை யாயமொடு கடலுட னாடியுஞ்
சிற்றி லிழைத்துஞ் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தந் தீர யாஞ்சிறி
திருந்தன மாக வெய்த வந்து
தடமென் பணைத்தோண் மடநல் லீரே
யெல்லு மெல்லின் றசைவுமிக வுடையேன் ஷை உசக
மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின் மற் றெவனோ
வெனமொழிந் தனனே யொருவ னவற்கண்
டிறைஞ்சிய முகத்தேம் புறஞ்சேர்பு பொருந்தி
யிவைநுமக் குரிய வல்ல விழிந்த
கொழுமீன் வல்சி யென்றன மிழுமென
நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ
காணா மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளு
மென்னே குறித்த நோக்கமொடு நன்னுத

அகநானூறு.

லொழிகோ யானென வழிதகக் கூறி

யாம்பெயர் தேனை நோக்கித் தான்றன்

னெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி

நின்றோன் போலு மின்றுமென் கட்கே.

என்பது, தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

போந்தைப் பசலையார். ௧௧௦

கரு. உள்ளாங் குவத்தல் செல்லார் கயத்தோ
றெள்ள னெஞ்சத் தேற்சொ ணனி
வருவர் வாழி தோழி யரசர்
யானை கொண்ட துகிற்கொடி போல
வலந்தலை ஞெமையத்து வலந்த சிலம்பி
யோடைக் குன்றத்துக் கோடையொடு துயல்வர
மழையென மருண்ட மம்மர் பலவுட
னெய்கனி குறைத்த நோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பி னுயிர்க்கு
மத்தக் கேழ லட்ட நற்கோட்
செந்நா யேற்றை கம்மென வீர்ப்பக்
குருதி யாரு மெருவைச் செஞ்செவி
மண்டம ரழுவத் தெல்லி கொண்ட
புண்டோய் விளக்கிற் றோன்றும்
விண்டோய் பிறங்கன் மலையிறந் தோரே.

எ-து, தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ. கஉ௦.

ககஉ கூன லெண்கின் குறுநடைத் தொழுதி
ஒதலே செய்த செந்நிலப் புற்றின்
மண்புனை நெடுங்கோ டுடைய வாங்கி
யிரைநசை பரிக்கு மலைநாட் டுங்கு
ஈன்றணி வயவுப்பிணை பசித்தென மறப்புலி
யொளிசேர்ந்து மருப்பிற் களிறட்டுக் குழுமும்
பனியருஞ் சோலை யெமியை மென்றும்
தீங்குசெய் தனையே யீங்குவந் தோயே
நாளிடைப் படினென் தோழி வாழா
டோரிடை ஓயங்கமதி நீயும் வெய்மை
கழியக் காதல ராயினுஞ் சான்றோர் (தொ, பொ, முக் சகரு, சுஅச)
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்
வரையி னெவனோ வான்றோய் வெற்ப
கணக்கலை யிருக்குங் கடியுயர் சிலம்பின்
மணப்பருங் காமம் புணர்ந்தமை யறியார்
தொன்றியன் மரபின் மன்ற லயரப்
பெண்கோ ளொழுக்கங் கண்கொள நோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநா ணொடுக்கமுங் காண்குவம் யாமே.

எ-து, இரவுக்குறிவந்த தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி வரைவு கடாயது.

நெய்தற் சாயத்துய்த்த ஆவூர் கிழார். ககஉ.

௧௧௩ நன்கல் காலை நட்புக் கொடார்
சென்று வழிபடூஉந் திறவோல் சூழ்ச்சியம்
புன்தலை மடப்பிடி யகவுநர்ப் பெருமக
னன்மா வீசும் வண்மகிழ்க் குறைப்பொற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோச
ரிளங்கட் கமழு நெய்தலஞ் செறுவின்
வளங்கெழு நன்னா டன்ன வெந்தோண் மனைக்
தழங்கின் மிதா ரலரெழுந் தரந்த
நல்காது துறந்த காதல ரென்றுங்
கல்பொரூஉ மெலியாப் பாடிமிறை
யகல வலைசூழ்ந்த சுரைப்பெய்த
வல்சியர
யா.
ரிகந்தன வாமிறு மிடம்பார்த்துப் பகைவ
ரோம்பின ருறையுங் கூழ்கெழு குவைப்பிற்
குவையமில் விடைய வொருஅ வொய்யுங்
கணிஅன யிருங்கற் கேணை கனிகாழ் நெடுவேல்
விழுவயர்ந் தன்ன கொழும்பல் திற்றி
யெழாஅற் பாண னன்றெட்டும்பர்
வெறிசெல்வம்பலர்க் கொண்டு தெவ்வர்
றெதிபடை கதீஇய சேயரிச் சின்னி

அகநானூறு.

ர்யுதுறை யயர்மலர்ப் புதுக்களைப் போகிச்
சேயரென்னலின் இலமை யுத்தவென்
[illegible]
தெவ்வம்பிலர்க்கே நின்றி நீங்க
வழாஅ முனைதரு முரியம் பராஅரை
யலங்கல் வஞ்சினக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவ ணொழியப் போகியவர்
செய்வினை மருங்கிற் செலீஇய ரென்னுயிரே.

என்பது, தலைமகன் பிரிந்தவிடத்துத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கல்லாடனார். ௧௧௨

க.— களிற்றியானை நிரை.

௧௧௪ கேளா யெல்லி தோழி வேலன்
வெறியயர் களத்துச் சிறுபலி தூஉய்
பரவல் புனைந்த வார்த்தையும் புகலி
யிரவுக் கதிர் மழுங்கிய கல்சேர் ஞாயி
௫. றரவுநுங்கு மதியி னையென மறையுஞ்
சிறுபுன் மாலை யுள்ளா ரவரென
நப்புலந் துறையு மெவ்வ நீங்க
பாகவி வல்லவ கடவுமதி யுவக்கா
ணொடுங்கொடி யடங்கும் வான்றோய் புரிசை
௧௦. யாமங் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வான மீனின் வயங்கித் தோன்று
மருங்கடிக் காப்பி னஞ்சுவரு மூதூர்த்
திருநக ரடங்கிய மாசில் கற்பி
னரிமதர் மழைக்க ணமைபுரை பணைத்தோ
௧௫ ளணங்குசா லரிவையைக் காண்குவம் போல
பொலம்படைக் கலிமாப் பூண்ட தேரே.

என்பது, வினைமுற்றி மீண்ட தலைமகன்
தேர்ப்பாகற்குச் சொல்லியது.

௧௧௫

கக௫ அழியா விழவி னஞ்சுவரு மூதூர்ப்
பழியில ராயினும் பலர்புறங் கூற
மம்ப லொழுக்க மாகிய வெஞ்சொற்
சேரியம் பெண்டி ரெள்ளினு மென்றுக
ஆண்டு வொருமை குடநாட் டன்னவென் ஒருமை (குடநாடு)
ணையலர் தொலையினுந் தொலைக வென்று
நோயில ராகநங் காதலர் வாய்வா
லெவ்வி வீழ்ந்த செருவிற் பாணர் எவ்வாய ௫௫
கைதொழு மரபின்முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர்மருப் பன்ன வொள்ளிணர்ச்
சுடர்ப்பூங் கொன்றை யூழுறு விளைநெற்
றறைமிசைத் தாஅ மத்த ரிளிடைப்
பிறைமருள் வான்கோட் டண்ணல் யானைச்
சினமிகு முன்பின் வயமா னஞ்சி அஞ்சியை ௯௯
யானாங்கொண் டொளிக்கு மஞ்சுவரு கவலை
நன்ன ராய்கவின் றொலையச் சேய்நாட்டு
நந்நீத் துறையும் பொருட்பிணிக்
கூர்க மைம்மி னிடை யோரே.

எ-து, பிரிவிடை வற்புறுக்குந் தோழிக்குத்
தலைமகள் சொல்லியது.

மாமூலனார். ககச

௧௧௬ எரியகைந் தன்ன தாமரை யிடையிடை
யரிந்துகால் குவித்த செந்நெல் வினைஞர் தொ, பொ-
கட்கொண்டு மறுகுஞ் சாகா டளற்றுறி
னாய்கரும் படுக்கும் பாய்புன லூர
பெரிய நாணில மன்ற பொரியெனப்
புன்கவி ழகன்றுறை பொலிய வொண்ணுத
னறுமலர்க் காண்வருங் குறும்பல் கூழை
மாழை நோக்கிற் காழ்கிளர் வனமுலை
யெஃகுடை யெழினலத் தொருத்தியொடு நெருநல்
வைகுபுன லயர்ந்தனை யென்ப வதுவே
பொய்புறம் பொதிந்தியா னரப்பவுங் கைகடந்
தலரா கின்றாற் றானே மலர்தார்
மையணி யானை மறப்போர்ச் செழியன் செழியன் கூடல்
பொய்யா விழவிற் கூடற் பறந்தலை
யுடனிலை தொலைந்த இருபெரு வேந்தர் சேரசோழ
கடன்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
யொருங்கிசை முரசமொழியப் பரந்தவ
ரோடுபுறங் கண்ட ஞான்றை
யாடுகொள் வியன்களத் தார்ப்பினும் பெரிதே.

என்பது, தோழி தலைமகனுக்கு வாயில் மறுத்தது.

பரணர். ௧௧௬

க.— களிற்றியானை நிரை.

ககஎ மௌவலொடு மலர்ந்த மாக்கொ ளைச்சிய
மவ்வரி யல்கு லாயமொ டுன்னா
ளேதிலன் பொய்ம்மொழி நம்பி யோவின
வளங்கெழு திருநகர் புலம்பப் போகி
வெருவரு கவலை யாங்க ணருள்வரக்
கருங்கா லோமை யேறி வெண்டலைப்
பருந்துபெடை பயிரும் பாழ்நாட் டாங்கட்
பொலங்கொடி யுதிர்ப்ப வீசிச் சேவடிச்
சிலம்புநக வியலிச் சென்றவென் மகட்கே
சாந்துளர் வணர்குரல் வாரி வகைவகுத்
தியான் போது துணைப்பத் தகர மண்ணு
டன்றே யன்ன தகைவெங் கலுழென்
வெறிகமழ் பன்மலர் புணையப் பின்னுவிட்ச்
சிறுபுறங் குதையிய நெறிபுதாழ்ந் தனகொ
னெடுங்கான் மாஅத் தூழுறு வெண்பழங்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும்
பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர்
வாணன் சிறுகுடி வடாஅது
தீநீர்க் கான்யாற் றவிரறல் போன்றே.

வாணன் சிறுகுடி வடபாற் கான்யாறு

எ—து, மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது. ககஎ.
பயன் அற்றமை நீங்குதல். மெய்ப்பாடு அழுகை.

௧௧௮ கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅத் — இறையனார், ப. ௧௩-௧
தேங்கம ழிணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ
~~[illegible]~~
மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத்
(௫) தியன்முரு கொப்பினை வயநாய் பிற்படப்
பகல்வரிற் கவ்வை யஞ்சுவ லிகல்கொள்
விளம்பிடி கன்றொடு விரைஇக் கயவாய்ப்
பெருங்கை யானை கோட்பிழைத் திரீஇய
வடுபுலி வழங்கு மாரிரு ளருநாட்
(௧௦) டனியை வருத லன்னியு மஞ்சுது
மென்னு குவள்கொ ளுனை பண்ணைப்
புணர்குறி செய்த புலர்குர லேனற்
கிளிகடி பாடலு மொழிந்தன
னளிய டானின் னளியல திலளே.

என்றது, செறிப்பு அறிவுறீஇ இரவும் பகலும் வாரலென்று வரைவு கடாயது. ௧௧௮.

௧௧௯ நுதலுந் தோளுந் திதலை யல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும் வாட
வருந்துவ ளிவளெனத் திருந்த நோக்கில்
வரைவுநன் றென்னா தகலினும் வரவறிந்
தாறுசென் மாக்க ளுவத்த புரண்டை
யெறுவெறு பாம்பின் பைந்துணி கடுப்ப
நெறிவயிற் றிரங்கு மத்தம் வெறிகொள
வுமணசாக் கொண்ட வொளிறுகல் லுப்பி
சென்சில மழுவ ரீண்புகுக் கயருஞ்
சுரன்வழக் கற்ற தென்று துரஞ்சிறந்து
நெய்த நுருவி னிடிஇங் கவலைக்
தொடையமை பீலிப் பொலிந்த கடிகை
மடையமை திண்சுரை மரக்கோல் வேலொடு
தனியம ரழுவர் தம்மொடு துணைப்பர்
துணிகுவர் கொல்லோ தாமே யணிகொள்பு
மறப்புலி யுழந்த வசிபடு சென்னி
யுருநோய் வருத்தமொ டுணீஇய மண்டிப்
படிமுழ மூன்றிய நெடுநல் யானை
மைநோய்த் துயர்க்கும் வஞ்சானை
மைதோய் சிமைய மலைமுத லாறே.

பா—து. செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.
குடவாயிற் கீரத்தனார். ௧௧௯:

க.— களிற்றியானை நிரை.

(௲)

கஉ0 20 நெடுவேண் மார்பி னாரம் போலச் [தொல், பொ, பக்-க]
செவ்வாய் வானந் தீண்டிமீ னருந்து
பைங்காற் கொக்கி னிரைப்பறை யுகப்ப
எல்லை பையபயக் கழிப்பிக் குடவயிற்
ரு. கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழின் மழைக்கண் கலுழ விவளே
பெருநா ணணிந்த சிறுமென் சாயன்
மாணலஞ் சிதைய வேங்கி யானு
தழுதெடங் கிளைவொள பெருமை யருந்தேற்
புண்ணை யுடையகால் தாள். கழிச்சுறா வெறிந்த புட்டா ளத்திரி [ஷை - குறுந]
நெடுநீ ரிருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரோ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ தன்றோ
பெண்ணை யோங்கிய வெண்மணற் படப்பை
கரு அன்றி லகவு மாங்கட்
சிறுகுர னெய்தலெம் பெருங்கழி நாட்டே.

என்பது, தலைமகற்குக் கிட்டத் தக்கத் தலைமகனை
எதிர்ப்பட்டுநீங்கும் தோழி சொல்லியது.

நக்கீரர். கஉ0. 20

புட்டாள் — புண்ணையுடையகால்



